விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 14 புதன்கிழமை (28.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 191

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

மயிலிட்டி துறைமுகம் 3ஆம் திகதி விடுவிப்பு

(மயிலிட்டி)

வலி வடக்கு பகுதியில் 27 வருடங்களாக இராணுவத் தினரின் வசமிருந்த மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் எதிர் வரும் மூன்றாம் திகதி விடு விக்கப்படவுள்ளதுடன், அதை அண்டிய 54 ஏக்கர் நிலப் பரப்பும் மக்களின் பாவனைக் காக கையளிக்கப்படவுள்ளது. வலி வடக்கு பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக 24

வித்தியா படுகொலை வழக்கு; இன்று 'ரயல் அட்பார்' விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தி யாவின் படுகொலை வழக் கின் நீதாய விளக்க முறை யிலான (ரயல் அட்பார்) விசா ரணைகளின் தொடர் விளக் கம் இன்றைய தினம் யாழ் மேல் நீதிமன்றின் மூன்றாம் மாடியில் ஆரம்பிக்கப்படவுள் ளது.

குறித்த வழக்கின் விளக்க விசாரணையின் ஆரம்ப நாளான இன்றையதினம், பதில் சட்டமா அதிபர் டப்புள டி லிவேரா மன்றில் முன்னி லையாகி தொடக்க உரை யினை வழங்கவுள்ளார். புங்குடுதீவு மாணவி 23

பாதுகாப்பு பிரதானியாக கிருசாந்த டிசில்வா

(கொழும்பு)

இராணுவ தளபதி லெப் டினன்ட் ஜெனரல் கிருசாந்த டிசில்வா, ஜெனரல் தரத்திற்கு உயர்த்தப்பட்டு பாது 23

முதலமைச்சருக்கு உள நெருக்கடி கொடுப்பதற்கு சதித்திட்டம்!

அதிர்ச்சித் தகவல்கள் கசிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு உள ரீதியாக நெருக்கடி கொடுப் பதற்கு தமிழரசுக்கட்சியில் இருக் கக் கூடிய சிலர் சதித்திட்டம் தீட்டி யுள்ளதாக உள்ளக தகவல்கள் கசிந் துள்ளன. (23ஆம் பக்கம் பார்க்க)



சம்பந்தன் - விக்னேஸ்வரன் விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

வட மாகாண விவசாய மற்றும் கல்வி அமைச்சர் பதவி தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட் டமைப்பின் கட்சித் தலைவர் கள், வடக்கு முதல்வர் சி. வி. விக் னேஸ்வரன் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம் பந்தன் ஆகியோருக்கு இடை யில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இவ் வாரத்திற்குள் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக, தெரிய 23

தரம் ஒன்று விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு பாட சாலை மாணவர்களை உள் வாங்குவதற்கான விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். 23

ஐ.நாவில் பதவி ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை யின் பொது செயலாளர் என் டோனியோ குட் 23

95 அரசியல் கட்சிகள் பதிவுக்கு அனுமதி கோரல்

(கொழும்பு)

95 அரசியல் கட்சிகள் பதிவிற்காக அனுமதி கோரி யுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. தேர்தல் ஆணைக்குழு வின் தலைவர் மகிந்த தேசப் பிரிய இதனைத் தெரிவித் துள்ளார்.

விண்ணப்பித்துள்ள கட்சி களில் 92 கட்சிகள், பதிவிற் கான அனைத்து தகுதிகளை யும் பூர்த்தி செய்து 23

பௌத்தம் ஜனாதிபதியால் பாதுகாக்கப்படும் - சாந்த பண்டார

(கொழும்பு)

பௌத்த மதத்தை ஜனாதி பதி பாதுகாப்பார். அத்துடன் பௌத்த மதத்தை இல்லா தொழிப்பதாக சுமத்தும் குற்றச் சாட்டுக்கள் பாவகாரியமாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்ன ணித் தலைவர் சாந்த பண் டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங் கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 23

கல்வியமைச்சரை நானே நியமிப்பேன் முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்விய மைச்சராக, மாகாணசபை உறுப்பினர் ஆர்னோல்ட் நியமிக்கப்பட்டுள்ளார் என வெளியான செய்திகளில் எவ்விதஉண்மையும்இல்லை என, வட மாகாண முதல மைச்சர் சி. வி. விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச் சர் ஊடகங்களுக்கு அனுப் பியுள்ள செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

கல்வியமைச்சராக உறுப் பினர் ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார் என தெரிவிக்கப்படு வதில் எவ்வித உண்மை யும் இல்லை. யாரை நிய மிப்பது என்பது தொடர்பில் என்னால் முடிவெடுக்கப்பட வில்லை.

நியமனங்களைச் செய்ய வேண்டியவர் முதலமைச் சரே. போரின் பின்னரான காலகட்டத்தின் தேவைகளுக் கும் முன்னுரிமைகளுக்கும் அமைவாக உரிய 23

கேப்பாப்பிலவு மக்கள் கொழும்பில் போராட்டம்

23

பல்கலை மாணவர் படுகொலை; மூடி மறைக்கும் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாண வர்கள் இருவர் சுட்டு படு கொலை செய்யப்பட்ட சம்ப வம் தொடர்பாக பொலிஸ் தரப்பினால் முதலில் நீதிமன் றுக்கு உண்மைக்கு புறம்பான தகவல்கள் வழங்கப்பட்டது ஏன் என சந்தேக நபர்கள் தரப்பு சட்டத்தரணி மன்றில் கேள்வியெழுப்பியுள்ளார்.

மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கு நேற் றையதினம் யாழ் நீதவான்நீதி

வீட்டு உரிமையாளர் படுகொலை; குற்றவாளிக்கு மரண தண்டனை

நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாட்டின் வீதி பகுதி யில் அமைந்துள்ள வீட்டின் உரிமையாளரான வயோதிப ரை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்ற வாளியாக இனங்காணப் பட்ட நபர் ஒருவருக்கு நேற் றையதினம் மரணதண்டனை வழங்கி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நனனெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலி.மேற்கு ஒருங்கிணைப்புக் கூட்டம்

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று 27ஆம் திகதி பி.ப 1.30 மணியளவில் நடைபெற்றது. இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், அங்கஜன் இராமநாதன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய பிரதேச செயலாளர் பதவியேற்ற பின் நடைபெற்றகூட்டத்தில்அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள் கலந்து கொண்டு பிரதேச அபிவிருத்தி சம்பந்தமாக திணைக்கள குறைபாடுகள் அபிவிருத்தி மந்த நிலை சம்பந்தமாக சமூகமட்ட அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

இதில் விசேடமாக பாடசாலைகளின் செயல் பாடு, அதிர்ஷ்டலெப் பாடு சம்பந்தமாக காரசாரமான கேள்விகள் தொடுக்கப்பட்டது.

அதேபோல் விவசாயிகள் பிரச்சினை, தொல்புரம் விவசாய திணைக்களச் செயற் பாடு சம்பந்தமாக கேள்விக்கு உட்படுத்தப்பட்டது.

ஆனால் அதற்கான பொருத்தமான பதில் கள் சம்பந்தப்பட்ட விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களால் வழங்கப்பட முடிய வில்லை.

இந்த நிலையில் விவசாயத்துக்கு வலி மேற்கு பிரதேச செயலாளரால் விசேட கூட்டம் கூட்டப்படல் வேண்டும் என ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முன்வைத் தார். அனைவரும் இதனை ஏற்றுக் கொண்டனர்.

இருப்பினும் பிரதேசத்தில் சமூகம் சார்ந்த விடயங்களில் அதிகாரிகள் மட்டத்தில் யதார்த் தமான பதில்களோ தீர்வோ முன் வைக்கப்பட வில்லை என பலரும் குறைபட்டுக் கொண் டனர்.

நந்தாவில்

கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

கொக்குவில்

வருடாந்த மகோற்சவம் 29.06.2017 - 09.07.2017

29.06.2017	வியாழக்கிழமை - கொடியேற்றம்
	வசந்த மண்டப பூசை மு.ப 8.30 மணி
	கொடியேற்றம் மு.ப 10 மணி
01.07.2017	சனிக்கிழமை - மஞ்சத் திருவிழா
	வசந்த மண்டப பூசை - பி.ப 5.00 மணி
	தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவீதியுலா
05.07.2017	புதன்கிழமை - கைலாச வாகனத் திருவிழா
	வசந்த மண்டபப் பூசை பி.ப 5.00
	தொடர்ந்து அம்பாள் கைலாச வாகனத்தில் திருவீதியுலா
07.07.2017	வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழா
	வசந்த மண்டபப் பூசை பி.ப 5.00 மணி
	தொடர்ந்து அம்பாள் சப்பறத்தில் திருவீதியுலா
08.07.2017	சனிக்கிழமை தேர்த் திருவிழா
	வசந்த மண்டபப் பூசை மு.ப 6.30 மணி
	தொடர்ந்து இரதோற்சவம் நடைபெறும்
09.07.2017	ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம்
	வசந்த மண்டப பூசை மு.ப 6.30 மணி
	தொடர்ந்து தீர்த்தோற்சவம்
	மாலை வசந்த மண்டபப் பூசை பி.ப 3.30 மணி
	தொடர்ந்து திருவூஞ்சல், கொடியிறக்கம்
10.07.2017	திங்கட்கிழமை பூங்காவனம்
	பிராயச்சித்த அபிஷேகம் காலை 5.30 மணி
	மாலை வசந்த மண்டபப் பூசை பி.ப 5.30 மணி
	தொடர்ந்து பூங்காவனத் திருவிழா
11.07.2017	விசேட சங்காபிஷேகம் மு.ப 8 மணி
	மாலை நேரடி வைரவர் பொங்கல் பி.ப 3.30 மணி

★தினமும் காலை 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

22.06.2017 ★அன்னதானம் வழங்கப்படும். பரிபாலன சபை

காணி விற்பனை

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிலையத்துக்கு வடக்குப் பக்கமாக 21 பரப்பும் தெற்கு பக்கமாக 86 பரப்பும் விற்பனைக்கு உண்டு (9601)

தொடர்பு: 071 848 7179

விற்பனைக்கு

லான்சர் மோட்டார் சைக்கிள், ஆட்டோ ABBXXXX இலக்கமுடையது விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 565 9976

உதவியாட்கள் தேவை

பொருட்கள் விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றுக்கு பொருட்கள் ஏற்றி இறக்க உதவியாளர் தேவை. (9597)

077 623 7956

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள நாடுங்கள்

உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303, K.K.S.ROAD, JAFFNA.

TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com (9588)

ஆசிரியர் தேவை

வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றுக்கு தரம் - 03, 04, 05, 06 க்கு சுற்றாடல், ஆங்கிலம், வரலாறு கற்பிக்கக் கூடியவர்கள் தேவை. (C-8902)

தொடர்பு கொள்ளவும்:-

077 087 2903, 076 892 7448

கண்ணீர் அஞ்சலி

அமரர் சீனியர் இராசா

தோற்றம்	மறைவு
14 - 10 - 1928	24 - 06 - 2017

வட மாகாண கல்விச் செயலாளர் இ.இரவீந்திரன் அவர்களின் பாசமிகு தந்தை அமரர் சீனியர் இராசா அவர்கள் 24.06.2017 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (9598)

வலயக் கல்விப் பணிப்பாளரும் சக பணியாளர்களும்
வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

மரண அறிவித்தல்

திருமதி சுந்தரலிங்கம் லலிதா (செல்வி)

ஊரெழு கரந்தனை பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் லலிதா (செல்வி) 26.06.2017 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம்-பத்மாதேவி தம்பதி களின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-நாகரத் தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கிராம சேவையாளர்-J/66) அவர்களின் அன்பு மனைவியும், சிந்துஜன் (தாதிய உத்தி யோகத்தர்-யாழ்.போதனா வைத்தியசாலை), யதுர்சன், நிருஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாரதி (ஜேர்மனி), பகீரதி (கனடா), பாமினி (கனடா), ஜெயராஜ் (பாபு-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2017 வியாழக்கிழமை காலை 7 மணி யளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக காலை 9 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94/1 ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (9597)

தகவல்:-குடும்பத்தினர் 0212227075

திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலைமாணிப் பட்டப் படிப்பு (வெளிவாரி) அரையாண்டு அடிப்படை 2013/2014

மேற்படி கற்கைநெறிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்பட்ட வர்களுக்கான பாடத்திட்டத் தெரிவு தொடர்பான கலந்துரையாடல், பதிவு செய்தல் மற்றும் அறிமுக நிகழ்வுகள் கீழ்வரும் ஒழுங்குகளின் பிரகாரம் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விடயம்	திகதி	நேரம்	இடம்
பாடத்திட்டத் தெரிவு தொடர்பான கலந்துரை யாடல்	யூலை மாதம் 01-ம் மற்றும் 02-ம் திகதி	8.30	கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்
பதிவு செய்தல்	யூலை மாதம் 03, 04, 10, 11, 12, 13 மற்றும் 14-ம் திகதி	9.00 - 2.00	திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம்
அறிமுக நிகழ்வு	யூலை மாதம் 15-ம் மற்றும் 16-ம் திகதி	8.40	கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்

தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையி லுள்ள வழங்கப்பட்ட தகவல்களின் மேலதிக விபரங்களும் இணையத்தளத்திலும் (www.codl.jfn.ac.lk) மற்றும் முகப்புத்தகப் பக்கத்திலும் (www.facebook.com/uoj.codl) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் மேற்படி இணையமுகவரிகளில் வழங்கப்பட்ட மேலதிக தகவல்களின் அடிப்படையில் நிகழ்வுகளில் பங்குபற்றிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
27.06.2017

(C - 8898)

29.06.2017 நாளை வியாழக்கிழமை

சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகரின் தேர்த் திருவிழா

தேர்த்தேனி நண்பகல் 12 மணியளவில்

சோழியூரான் பிறைசூடிக் குரு

(9596)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேப்பாப்பிலவு மக்கள் சொந்தநிலம் கோரி

கொழும்பில் நேற்றுப் பாரிய போராட்டம்

படங்கள்:-தவசீலன்

(கொழும்பு)

கேப்பாப்பிலவு மக்கள் தமது சொந்தநிலம் கோரி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்று 119 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் கொழும்பில் பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சம உரிமை இயக்கம் முன்னிலை சோஷலிச கட்சி மற்றும் கேப்பாப்பிலவு மக்கள் இணைந்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர்.

அதன்பின்னர் ஜனாதிபதி செயலகம் நோக்கி பேரணியாக சென்றபோது பொலிஸார் வீதி தடையை ஏறப்படுத்தி கலகமடக்கும் பொலிசார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ள வாகனங்கள் சகிதம் வருகைதந்து போராட்டக்காரர்களை இடைமறித்தனர்.

பின்னர் போராட்டக்காரர்களில் ஒருதொகுதியினரை பொலிஸார் ஜனாதிபதி செயலகம் அழைத்து சென்று அங்கு ஜனாதிபதியின் செயலாளரோடு சந்திப்பொன்றை ஏற்படுத்தி கொடுத்தனர்.

சென்றவர்கள் சந்திப்பை முடித்து வரும்வரை குறித்த இடத்திலேயே தரித்து நின்ற போராட்டக்காரர்கள் சந்திப்புக்கு சென்றவர்கள் வருகை தந்ததும் அவ்விடத்தைவிட்டு கலைந்து சென்றனர். (இ-28)

பாடசாலை மாணவர்களின் இறப்பு வீதம் அதிகரிப்பு!

அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்கள் உயிரிழக்கும் வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய வீதி பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது. அந்த சபையின் தலைவர் மருத்துவர் கோதா கொட இதுபற்றி கருத்து தெரிவிக்கையில், திடீர் அனர்த்தங்கள் டெங்கு தொற்று போன்றவற்றால் பாடசாலை மாணவர்கள் உயிரிழக்கும் வீதம் அதிகரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பதுளையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். (இ-7)

அரசுடமையாகின்றது சைட்டம் கல்லூரி மாணவர்களின் போராட்டத்திற்கு வெற்றி

சைட்டம்எனப்படும்மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சைட்டம் தனியார் நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு மருத்துவ சபையில் அனுமதி வழங்கப்பட்டமை மற்றும் அவர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் பயிற்சி வழங்கியமை உள்ளிட்ட பல விடயங்களுக்கு நாடளாவிய ரீதியில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், குறித்த மருத்துவ கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்பதாக அண்மையில் அறிவித்திருந்தது. தற்போது அதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ள நிலையில், விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நவீன வசதிகளுடன் கூடிய மாலபே தனியார் வைத்திய சாலையை போதனா வைத்தியசாலையாக்கி, மக்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படும் என அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

புகைப்படம் எடுத்தமை தொடர்பில் பிரதியமைச்சரிடம் FCID விசாரணை

பிரதியமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவில் நேற்று காலை 9.30 மணியளவில் ஆஜராகினார்.

விமான கொள்வனவின் போது நிதிமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சர்வதேச நாடுகளுக்கு உட்பட்டுள்ள ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவுடன் இணைந்து ஜப்பானில் வைத்து புகைப்படம் எடுத்துக்கொண்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைக்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார் என்பது

இன்று முதல் சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பம்

இன்று முதல் இரண்டு வாரங்களுக்கு மக்களின் பங்குபற்றுதலுடன் சுத்தம் செய்யும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் பணிப்புரைக்கு அமைய, இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக, சுகாதார

மழைக் காலத்தில் நுளம்பு பெருகுவதை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இவ் வருடத்தின் இதுவரையான காலப்

நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், அவர்களில் நூற்றுக்கு 25 வீதமானவர்கள் 19 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி சாஸ்திரி இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராவாரா?



இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரரும், பயிற்சியாளருமான ரவி சாஸ்திரிக்கு அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இந்திய சீனியர் அணியின் இயக்குநராகவும், பயிற்சியாளராகவும் இருந்தவர் ரவி சாஸ்திரி. இவர் 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அந்த பதவியில் இருந்தார்.

அவரது பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி அனில் கும்ளே தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். கும்ளே தனது ஒரு வருட கால பதவிக்காலம் முடிந்த பின்னர், விராட் ஹோலியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பதவியில் இருந்து விலகினார்.

கும்ளே 2-வது முறையாக தேர்வு செய்யப்படலாம் என்ற நிலை இருந்தது. இதனால் முக்கியமான நபர்கள் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்யவில்லை. சேவாக் மற்றும் ரொம் மூடி ஆகியோர் மட்டுமே முக்கியமானவர்கள்.

இதனால் மேலும் பலரது விண்ணப்பங்களை வரவேற்கும் வகையில் விண்ணப்பத்திற்கான கேடு நீட்டிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கிடையில் ரவி சாஸ்திரி தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் ரவி சாஸ்திரி இந்திய அணியின் பயிற்சியாளராக தேர்வு செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து பத்திரிகை ஒன்றுக்கு ரவி சாஸ்திரி அளித்துள்ள தகவலில், தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்ய முடிவு செய்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார். இதனால் ரவி சாஸ்திரி தலைமை பயிற்சியாளராக அதிக வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

என்னால்தான் ஹோலியை திருத்த முடியும் மெக்கானிக்கல் இன்ஜினியர் கூறுகின்றார்

ஹோலியின் திமிர்பிடித்த மனப்பான்மையை அடக்குவதற்கு சரியான நபர் நான்தான் என்று, பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்த மெக்கானிக்கல் இன்ஜீனியர் கூறியுள்ளார்.

இந்திய சீனியர் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த அனில் கும்ளே தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். இதற்கு விராட் ஹோலிதான் முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் விராட் ஹோலியை முன்னாள் வீரர்கள் கடுமையாக விமர்சனம் செய்து வருகிறார்கள்.

இந்திய அணிக்காக மிகப்பெரிய பங்களிப்பை அளித்த அனில் கும்ளேவிற்கே இந்த அவமானம் என்றால், மற்றவர்களுக்கு என்னாகும் என்று எல்லோரும் நினைத்து வருகிறார்கள். இந்நிலையில் பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பக் காலத்தை ஜூலை முதல் வாரம் வரை நீடித்துள்ளனர்.

இதைபயன்படுத்திய மெக்கானிக்கல் இன்ஜினியர் ஒருவர், விராட் ஹோலியின் திமிர்பிடித்த மனப்பான்மையை அடக்குவதற்கு நான் தான் சரியான நபர், அதனால் மெக்கானிக்கல் இன்ஜினியரான நான் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளேன் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து மெக்கானிக்கல் இன்ஜினியரான உபேந்திர நாத் பிரம்மச்சாரி கூறுகையில், ஜாம்பவான் அனில் கும்ளே ராஜினாமா செய்தபின், ஹோலிக்கு சிறப்பு வாய்ந்த நபர் பயிற்சியாளராக தேவையில்லை என்று நான் உணர்ந்ததால், தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடிவு செய்தேன். கங்குலி, லஷ்மண் மற்றும் டெண்டுல்கர் தலைமையிலான கிரிக்கெட் ஆலோசனைக் குழு எந்தவொரு முன்னாள் கிரிக்கெட் வீரர்களை தேர்வு செய்தாலும், அவர்கள் விராட் ஹோலியால் அவமதிக்கப்படுவார்கள்.

விராட் ஹோலியை என்னால் சரியான பாதைக்கு கொண்டு வர முடியும். ஏனென்றால், விராட் ஹோலியின் திமிர்பிடித்த அணுகுமுறையை என்னால் சமாளித்துக் கொள்ள முடியும். ஒரு கிரிக்கெட் ஜாம்பவானால் அது முடியாது. நான் மெதுவாக அவரை சரியான பாதைக்கு வளப்படுத்தி கொண்டு வர முடியும். அதன்பின் பி.சி.சி.ஐ ஜாம்பவானை தலைமை பயிற்சியாளராக நியமிக்க முடியும் என்றார்.

தோனியுடன் மகன் படம் எடுத்ததற்கு காரணம் கூறிய சப்பிராஸ் அஹமட்

சாதனை அணித் தலைவர் என்று பெயரெடுத்த தோனியுடன் தனது மகன் ஏன் படம் எடுத்தான் என்பதற்கான ரகசியத்தை பாகிஸ்தான் அணித் தலைவர் சப்பிராஸ் அஹமட் வெளிப்படுத்தியுள்ளார்.

சம்பியன்ஸ் டிராபி 50 ஓவர் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் ஜூன் 1ஆம் திகதி முதல ஜூன் 18ஆம் திகதி வரை நடைபெற்றது. இறுதிப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி பாகிஸ்தான் சம்பியன் பட்டம் வென்றது.

இந்த தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் நடைபெற்றது. லீக் போட்டியிலும், இறுதிப் போட்டியிலும் பலப்பரீட்சை நடத்தினார்கள். பொதுவாக இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி எலியும் பூனையும் மோதிக்கொள்வதற்கு இணையாக கருதப்படும். இதனால் ரசிகர்கள் பரபரப்பாகவே காணப படுவார்கள்.

அதேபோல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் வீரர்கள் மைதானத்திற்குள் ஆக்ரோஷமாக செயற்படுவார்கள். சில நேரங்களில் ஸ்லெட்ஜிங் எல்லை மீறுவதும் உண்டு.

ஆனால், சம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியா - பாகிஸ்தான் வீரர்களுக்கு இடையில் எந்த மோதலும் வரவில்லை. தங்களுக்குண்டான இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

இறுதிப் போட்டியில் இந்தியா தோல்வியடைந்த பிறகு, இந்திய அணித் தலைவர் விராட ஹோலி பாகிஸ்தான் வீரர் சொயிப் மாலிக் மற்றும் பந்துவீச்சு பயிற்சியாளர் அசார் மெஹ்முத் உடன் சிரித்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

போட்டிக்கு முன் பாகிஸ்தான் வீரர்களின் குழந்தைகளுடன் இந்திய வீரர்கள் போட்டோ எடுத்துக் கொண்டனர். தொடக்க வீரர் அசார் அலி குழந்தைகளுடன் விராட் ஹோலி, யுவராஜ் சிங் மற்றும் தோனி ஆகியோர் போட்டோ எடுத்துக் கொண்டனர்.

அணித் தலைவர் சப்பிராஸ் அஹமட் குழந்தையை தோனி எடுத்து பாசமாக கொஞ்சினார். அந்த படத்தை சப்பிராஸ் அஹமட் தனது சமூக இணையதளத்தில் வெளியிட்டிருந்தார்.

சம்பியன்ஸ் டிராபி கோப்பையுடன் பாகிஸ்தான் சென்ற அந்நாட்டு வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. நாள்தோறும் பாராட்டு மழையில் நனைந்து வருகின்றனர். அணித் தலைவர் சப்பிராஸ் அஹமட் ஒரு தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தார். அப்போது தன்னுடைய மகன் ஏன் தோனியுடன் போட்டோ எடுத்துக்கொண்டார் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

தோனியின் மடியில் தனது மகன் உட்கார்ந்து போட்டோ எடுத்துக் கொண்டது குறித்து சப்பிராஸ் அஹமட் கூறுகையில், இங்கிலாந்



தில் நான் எனது குடும்பத்துடன் பேசிக் கொண்டிருந்தேன். நாங்களும் இந்திய அணி வீரர்களும் ஒரே ஹோட்டலில் தங்கியிருந்ததால், ஒருமுறை நான் தோனியை பார்த்தேன்.

அப்போது அவரிடம் சென்று எனது மகன அப்துல்லா உடன் நீங்கள் நின்று போட்டோ ஒன்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டேன். எனது மகன் வளர்ந்த பிறகு, கிரிக்கெட்டின் மிகப்பெரிய ஜாம்பவான் மடியில் உட்கார்ந்து எடுத்த போட்டோ அவருக்கு இனிவான நினைவாக இருக்கும் என்றார்.

மரண அறிவித்தல்

சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

யாழ். அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீத பூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் நேற்று 27.06.2017 (செவ்வாய்க்கிழமை) இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலம் சென்றவர்களான அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும். காலம் சென்றவர்களான கந்தையா - சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி கல்யாணி சுதர்சன் (கனடா), திருமதி அமிர்தவர்சினி உதயகரன் (நோர்வே), திருமதி பாலினி கண்ணதாஸ் (ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தே.சுதர்சன் (கனடா), பெ.உதயகரன் (நோர்வே), க.கண்ணதாஸ் (விரிவுரையாளர் - இசைத்துறை யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரதும் சண்முகலிங்கம், திருமதி ஜானகி நாகேந்திரன் (சுவிடன்), சாவித்திரி (ஓய்வு பெற்ற தாதியர்), வைத்திய கலாநிதி செல்வி கௌரி செல்வரட்ணம் (வைத்திய நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரது அன்பு மாமனாரும் திருமதி இன்பராணி செல்வராசா, திருமதி சிறிகாந்தி ஆகியோரது சிறிய தந்தையும் க.நாகராசா (நோர்வே), காலம்சென்ற க.நாகேந்திரன் (சுவிடன்), க.நவரட்ணம் (இலண்டன்), க.நாகேந்திரதாஸ் ஆகியோரது அன்பு மைத்துனரும். சூதுர்க்கா, சு.தீபிகா, உ.கீர்த்தனா, உ.சாகித்தியா, க.இசைநிலவன், க.சுடரோன், க.தமிழ்வேந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலம் சென்றவர்களான ச.துரையப்பா, ச.தம்பித்துரை, ச.கணேசர், ச.நடேசர், சு.அம்பாலிகா மற்றும் அம்பிகா ராதாதேவி (ஓய்வு பெற்ற இசை ஆசிரியர்) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2017) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

203, புங்கங்குளம் வீதி,
அரியாலை.

(9598)

தகவல் :
க.கண்ணதாஸ் (மருமகன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நெடியகாடு கணபதி படிப்பகத்தின் பொன்விழாவினை முன்னிட்டு நடாத்தப்படும் போட்டிகள் வரிசையில்...

மாபெரும் இலக்கியத் திறமைக் களம்

போட்டி தொடர்பான அறிவுறுத்தல்கள்

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் வசித்த திறமையான ஒரு தமிழ்ப்பண்டிதருடைய ஒரு நூலில் உள்ள நான்கு பாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
2. நான்கு பாடல்களையும் பதம் பிரித்து எழுத வேண்டும். பின்பு அப்பாடல்களின் பதவுரையை எழுத வேண்டும். அவற்றை எமக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
3. அவைகள் தெரிவு செய்யப்பட்டு, அதில் தெரிவு செய்யப்பட்டவர்கள் நேரில் வருகைதந்து எமது முன்னிலையில் இருந்து அவற்றைத் திரும்பவும் எழுதித்தர வேண்டும்.
4. பாடல்களை மனனம் செய்து ஒப்புவிக்கின்றவர்களுக்கு மேலும் கூடிய புள்ளிகள் தரப்படும்.
5. அது மாத்திரமன்றி பொழிப்புரையையும் மனனம் செய்து ஒப்புவிக்கின்றவர்களுக்கு மேலும் கூடிய புள்ளிகள் தரப்படும்
6. தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் தங்களுக்கு வசதியான நேரத்தில் வந்து போட்டியில் தோற்றமுடியும்.
7. இப்போட்டியில் உலகில் உள்ள எவரும் தோற்ற முடியும்.

இதோ பாடல்கள்

சோமனிகருமுக மடந்தை சொற்கடவறானற்பினுட
னாமவடிவேனர பதியு நறவுபிலிற்று நறுங்கொன்றைத்
தாமன் விழிப்பட்டழியாமற்றழைக்குங் கழைக்கூன்றவர் குழைக்குங்
காமனிரதி யெனக் கூடிக்கலந்து கலவிநலந்திளைத்தான் க 1

சொரியுமதமால்கவிறுனைய தோன்றறனையத் தோகையன்பாம்
புரிகொணாணாள் முலைத்தறியிற் பூட்டிப்பவளம் பொருவுமிதழ்ப்
பரியு மமுதக்கவளமயற் பசிதீர்ந்திட வேநல்குதலாற்
பிரிதலாற்றான் சேவலன்றிற் பெடையாமெனப் பெட்புற்றிருந்தான் உ 2

இவ்வண்ணநெடுங்காலங் கழிந்ததற்பின்றியேகாதசிவந்தெய்த
மைவண்ணத்திருள் கடிந்து மார்த்தாண்டன் பூருவத்தின் மருவுங்காலைப்
பைவண்ணக்கடி தடத்தாள் பார்த்திவற்கு நறும் பாகுபரிந்து நீட்டக்
கைவண்ணக்கமலதின் வாங்கிய பின் முரசினொலி காதிற்கேட்டான் ங 3

இன்றிடர்தீர்த்திடுமேகாதசி விரதமென்று முரசெற்றினாராற்
றின்றிடலாகாது துவர்க்காயென மீண்டவள்கரத்திற்றிரும்பநீட்ட
மன்றன்மலர்க்குழன் மறுத்து வாங்காமல் வெறுத்தூடி மனம் வேறாகி
யுன்றனது கரத்தளித்ததருந்தாமலிகழ்ந்ததென் கொலுரைத்தியென்றாள். ஞ 4

கீழே இன்னுமொரு பாடல் உள்ளது இதனைப் புணர்த்தி எழுதுதல் வேண்டும்

இத்தினம் நான் தந்திடும் பாக்கிலை அருந்தாது என்ன வன்மம் இருந்தது என்னோடு
அத்தினத்தில் மொழிந்த மொழி தவறினையால் ரது அரசற்கு அழகோ என்னா
முத்தினை நேர் தரும் தவள முரல் உருப்பசியும் மிக முனிந்து சிறித்
தத்தின வாம்பரி அரசைத் தணந்து ஏக நினைந்தாள் முன் சபதம் தன்னால்.

விடைகள் அனுப்பவேண்டிய இறுதித்தினம் :- 20.07.2017

விசயம் பெறுகின்ற முதல் மூவருக்கும் பரிசில்கள் மாத்திரமல்லாமல் அதியுயர் இலக்கிய விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள்.

உங்கள் விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
தலைவர் / செயலாளர்
கணபதி படிப்பகம்
நெடியகாடு
வல்வெட்டித்துறை.

தொடர்புகளுக்கு :~ இ.ஞானசுந்தரம்
(கட்டி அண்ணா, போட்டி ஒருங்கிணைப்பாளர்,
தொ.பே.இல :~ 0776509676)

e-mail :- kanapathyreadingroom@gmail.com

இங்ஙனம்
வல்லை கணபதி படிப்பக நிர்வாகம்

நாடளாவிய ரீதியில் நேற்று தபால் சேவை ஸ்தம்பித்தது

தபால் சேவை ஊழியர்கள் முன்னெடுத்துள்ள நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக, தபால் சேவை நேற்று முற்றாக ஸ்தம்பித்தது.

ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டில், இப் போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா, கண்டி, காலி ஆகிய தபாற் காரியாலயங்களை உல்லாச பயணத் துறைக்கு பயன் படுத்தும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கொழும்பு பிரதான தபால் காரியாலய கட்டடத்தில் மீண்டும் தபால் காரியாலயத்தை ஆரம்பிக்காமை மற்றும் ஊழியர்சட்ட மூலத்தை திருத்தி நடைமுறைப் படுத்தாமை உள்ளிட்ட நிர்வாகத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலே இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் என சகல மாவட்டங்களிலும் தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதோடு, தபால்கள் விநியோகிக்கப்படாமல் தேங்கிக் கிடந்தன.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அஞ்சற் பயிற்சிக் கல்லூரி, ஒரு விசேட தர தபாலகம், முதலாம் தர தபாலகங்கள் 8, இரண்டாந்தர தபாலகங்கள் 13, உப தபாலகங்கள் 66 உட்பட 88 தபாலகங்களும் மூடப்பட்டுள்ளன.

அத்தோடு தென்னிலங்கை, மலையகம் போன்ற சகல பகுதிகளிலும் இப் போராட்டம் தொடர்வதால் மக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஒன்றிணைந்த தபால் சேவை தொழிற்சங்கத்தால் கடந்த 12ஆம் திகதி முதல் 48 மணிநேர பணிப்புறக் கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த சனிக்கிழமை தபால் சேவை அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீமுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. எனினும், இக் கலந்துரையாடல் வெற்றியளிக்காத காரணத்தால் நாடு முழுவதும் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுப்பதாக ஐக்கிய தபால் வர்த்தக தொழிற் சங்கத் தலைவர் சிந்திக பண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தற்போது உயர்தரம் சித்திபெற்ற மாணவர்களது பல்கலைக் கழக அனுமதிக் கடிதங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கும்மஹாபொல புலமைப் பரிசில் கடிதங்கள் போன்றன தேங்கும் நிலை காணப்படுவதனால் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் பல்கலைக்கழக பிரவேசம் தாமதமாகலாம் எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வேலை நிறுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

இராசி பலன்

28.06.2017
(ஆனி 14, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 12.06 மணிவரை
மகம் பின்னிரவு 12.48 மணிவரை
சுபநேரம் 4.25 - 5.55 மணிவரை
இராகுகாலம் 11.55 - 1.25 மணிவரை
மாணிக்கவாசகர் குருபூசை
ஸ்கந்த பஞ்சமி, சித்தாமிர்தம்
வளவன்

	சுக்		சூரி, புத, செவ்
கேது	கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம், திருவோணம்		
	சனி		குரு

மீனம் — உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேக நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

மேடம் — பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

இடபம் — விருந்தினர் வருகையுண்டு, பெற்றோர்ரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

மிதுனம் — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

கும்பம் — மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

மகரம் — சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

தனுசு — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

விருச்சிகம் — தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பயணங்களால் பயன் கிடைக்கும், பொது வாழ்வில் புகழ் கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

துலாம் — எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

கடகம் — குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

சிம்மம் — நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

கன்னி — சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு வடமராட்சி மாணவர்கள் விழிப்புணர்வு ஊர்வலம்

வடமராட்சியிலுள்ள பாடசாலை மாணவர்களால் நேற்றைய தினம் போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது மாணவர்கள் போதைப் பொருளுக்கெதிரான சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஊர்வலமாகச் சென்றனர். இவ் ஊர்வலத்தில் நெல்லியடிப் பொலிஸார் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- மகாலிங்கம்)

முதியவர்களை புறக்கணிக்கும் இலங்கை போ.ச.பேருந்துகள்

பருத்தித்துறை பிரதான பேருந்து தரிப்பிடத்தில் இல ங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளில் சில பேருந் துகள் பேருந்து தரிப்பிடத் தில் நிற்கும் வயோதிபர்களை ஏற்று வதைத் தவிர்த்து அவர்களை விட்டுச் செல்வதாக பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனால் வயோதிபர்கள் தேவைகளுக்கும் மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்கும் செல்ல முடியாமல் அவதிக்குள் ளாகின்றனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரி கள் நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத் துள்ளனர். (இ-60)

ஐந்தரைப்போத்தல் கசிப்புடன் ஐம்பது வயது நபர் கைதானார்

துன்னாலை பகுதியில் நெல்லியடிப் பொலிஸார் மேற் கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 5 1/2 போத்தல் கசிப்பினை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கசிப்பு வடிக்கப் படுவ தாக நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.ஏ. பிரியத்த வுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதி யில் உள்ள வீடு ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார் 5 1/2 போத்தல் கசிப்புடன் 50 வயது நபர் ஒருவரைக் கைது செய்தனர். (இ-60)

சாவகச்சேரி டச்சு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(மந்துவில்)

சாவகச்சேரி டச்சு வீதியில் புளியடிச்சந்தியிலிருந்து நாங்க ரன்பொதுமண்டபம்வரையான சுமார் 200 மீற்றர் நீளமுடைய வீதி நீண்ட காலமாக செப்பனி டப்படாமையால் குன்றும் குழியு மாகக் காணப்படுகின்றது.

இவ்வீதிச்சுற்றாடலில் வைத் தியசாலை, பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங் கள் போன்றவை காணப்படு வதனால் இவ்வீதியால் பய ணிப்போர் பெரும் அசௌக ரியங்களுக்கு உட்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உரிய நட வடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (இ-10-101)

கோப்பாய் பிரதேச பொலிஸ் பாதுகாப்புக்கூட்டம் இன்று

(நல்லூர்)

கோப்பாய்பிரதேசபொலிஸ் பாதுகாப்புக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோப் பாய் பிரதேச செயலக மாநா ட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுபாகினி மதியழகன் தலைமையில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில்அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் பொறுப் பதிகாரிகளும்சிவில்பாதுகாப் புக் குழு உறுப்பினர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும்கலந்துகொள் ளவுள்ளனர். (இ-10-134)

ஆலய வீதியில் சேரும் கழிவுகள்; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(தும்பளை)

பருத்தித்துறை மருதங் கேணி வீதியிலுள்ள வல்லிபு ரம் ஆழ்வார் கோவிலுக்கு செல்லும் வீதிக்கருகில் கழிவு களை கொட்டுவதனால் அப் பகுதி மக்களும் ஆலயத்திற் குச் செல்லும் அடியார்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக் கப்படுகின்றது.

இதுதொடர்பில்உரியஅதிகா ரிகள் கவனத்திலெடுத்து தகு ந்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-19)

மஹோற்சவம்

மல்லாகம்-கோட்டைக் காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற் சவம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமைகாலை 9.30மணிக்கு தேர்த் திரு விழாவும் மறுநாள் செவ் வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா வும் இடம் பெறவுள்ளன. (இ-3)

தீண்மக் கழிவகற்றல் செயற்றிட்டம்

யாழ்.மாநகர சபை எல் லைக்குட்பட்ட தீண்மக் கழிவ கற்றல் தொடர்பான பிரச்சி னைக்குத் தீர்வு காணும் பொருட்டு யாழ். மாவட்ட செய லகத்தினால் யாழ்.நகரில் அதிகூடிய சுற்றுச் சூழல் பாதிப் பினை எதிர்நோக்கியுள்ள கிராமங்களில் தீண்மக் கழிவு முகாமைத்துவத்தினை மேலு வதற்கான செயற்பாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற் பகல் ஒருமணிவரை மேற்கொள் ளப்படவுள்ளது. இந்நிகழ்வில் அரச தனியார் மற்றும் சிவில் சமூகம் சார்ந்த 2000 பேரும் பொதுமக்களும் தூய்மையா க்கல் செயற்றிட்டத்தை மேற் கொள்ளவிருப்புவது குறிப் பிடத்தக்கது. (இ-10-108)

கடற்றொழிலாளர்களுக்காக படிகள் அமைப்பு

(குருநகர்)

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தி சங்கத்தினரால் கடற்றொழிலாளர்கள் இலகுவான முறை யில் தொழில் நடவடிக்கையில் ஈடுப ஏறி இறங்குவதற்கு படிகள் அமைக்கப் பட்டுள்ளன. கடற் றொழிலாளர்கள் நலன் கருதி மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்பட வுள்ள தாக அச் சங்கத்தின் பொருளாளர் மரியநாயகம் மனுவல் தெரிவித்தார். (இ-5-10-105)

மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

(இருபாலை)

யாழ். நீர்வேலி .சி.சி.த.க. பாடசாலையில் இன்று காலை 9 மணிக்கு மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு அதிபர் ர.ரவீந்திரநாதன் தலைமை யில் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் சிறப்பு சொற்பொழிவாற்று வார். மேலும் பாடசாலை மாண வர்களின் கலை நிகழ்வுக ளும் இடம்பெறவுள்ளன. (இ-10-136)

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்றுக்காலை 8 மணியளவில் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி கௌ:அருள்மொழி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமத். விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிறைஜா மயூரதாசன், காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.குமரேசமூர்த்தி, சிவஸ்ரீ ப.லகுந்தரூபக்குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு புதிய கட்டடத்தினைத் திறந்து வைத்தனர். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?

பொருளாதார மையத்தை ஒமந்தையில் அமைக்க வேண்டும் என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முடிவு செய்ததன் காரணமாக அதனை எதிர்க்க வேண்டும் என நினைத்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தமது தெரிவு தாண்டிக் குளம் என்பதாக அறிவித்தனர்.

வட பகுதிக்கான பொருளாதார மையத்தைக்கூட ஒன்று பட்டு தெரிவு செய்யும் உடன் பாடு வடக்கு மாகாண சபையில் இல்லை எனும் போது தமிழ் மக்கள் என்னதான் செய்ய முடியும்.

பொருளாதார மையத்தை தாண்டிக்குளத்தில் அமைப்பதா? ஒமந்தையில் நிறுவுவதா? என்ற வாதப் பிரதிவாதங்கள் அடங்கிப் போக பொருளாதார மையம் என்ற விடயமும் அப்படியே அமிழ்ந்து போயிற்று. இப்போது பொருளாதார மையம் பற்றிய எந்தத் தகவலும் கிடையாது.

இது பற்றி வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் எவராவது எழுந்து பொருளாதார மையத்திற்கு நடந்தது என்ன? என்பது பற்றிகேள்வி எழுப்புவதாகவும் இல்லை.

இப்படியே வடக்கு மாகாண சபையின் நிலைமை இருக்க, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களும் பிரதி அவைத் தலைவராகவும் இருந்த அன்ரனி ஜெகநாதன் அவர்கள் விபத்தொன் றில் உயிரிழந்து விடுகிறார்.இலங்கைத் தமிழரசுக் கட்சியில் மிகத் துணிகரமாக எழுந்து நின்று நியாயத்தை உரைக்க வல்லவர் அவர்.

வடக்கு மாகாண சபையின் நான்கு அமைச்சர்களையும் நீக்கி விட்டு புதிய அமைச்சர்களை நியமியுங்கள் எனக் கோரிக்கை விட்டதில் முதன்மையானவர் அவர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனை இளம் உறுப்பினர்கள் சிலர் எதிர்த்து பேசும் போதெல்லாம் அன்ரனி ஜெகநாதன் எழுந்து நின்று கர்ச்சித்தவர். அவருக்குப் பயந்து சில உறுப்பினர்கள் மௌனம் கடைப்பிடித்ததும் உண்டு. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் பயம் கொள்கின்ற ஒருவர் என்றால் அது அன்ரனி ஜெகநாதன் என்றே சொல்ல முடியும். அந்தளவிற்கு நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்ட அன்ரனி ஜெகநாதன் அகால மரணமடைந்தது மிகப் பெரிய இழப்பு எனலாம். அவரின் மரணத்தையடுத்து பிரதி அவைத் தலைவர் பதவி வெற்றிடமாக இருந்தது. அந்த வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பில் நான் வரும்வரை எந்தத் தீர்மானமும் எடுக்க வேண்டா மென அப்போது வெளிநாட்டில் தங்கியிருந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்



தமிழர் தலைவிதி எப்படியாகும்?

அவர்கள் அவைத் தலைவருக்கு தகவல் அனுப்பியிருந்தார். எனினும் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு பிரதி அவைத் தலைவராக வல்லிபுரம் கமலேஸ்வரனைத் தெரிவு செய்தார்.

பிரதி அவைத்தலைவர் நியமனத்தைச் செய்வதில்கூட முதலமைச்சரின் கருத்துக்கு இடம்கொடாமல் சுயாதீனமாக சபை செயற்பட்டபோதுகூட முதலமைச்சர் விக்னேஸ்வரன் அமைதியாகவே இருந்தார்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை முதலமைச்சிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கை தொடர்பிலும் விவாதங்கள் முன்வைக்கப்பட்டன.

அமைச்சர்கள் தொடர்பிலான விசாரணை அறிக்கை முதலமைச்சரிடம் வழங்கப்பட்டும் அது இன்னமும் சபைக்குத் தரப்படவில்லை என்பதே அந்த விவாதமாக இருந்தது. மிக நீண்டதான விசாரணை அறிக்கையை வாசிப்பதற்கும் அதிலிருந்து சில தீர்மானங்களை எடுப்பதற்கும் கூட, அவகாசம் வழங்குவதற்கு விருப்பமில்லாமல் ஆடறுப்பதற்கு முன்னமே ஆனத்துக்குச் சட்டி நீட்டுபவர்கள் போல சபை உறுப்பினர்கள் சிலர் நடந்து கொண்டனர். இந்நிலையில் 07.06.2017 ஆம் திகதி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் அவர்கள் வடக்கு மாகாண சபையில் விசாரணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது சபையில் இருந்த உறுப்பினர்கள் சிலர் அதிர்ந்து போயினர்.

அவ்வாறு அதிர்ந்து போன வர்கள் அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த வேண்டு மெனத் தீவிரமாகக் குரல் கொடுத்தவர்கள் என்பது தான் அதிசயமான உண்மை.

ஏன் இவர்கள் இவ்வாறு மாறிக்கொண்டனர் என்ற கேள்வி எழும்போது அமைச்சர்கள் மீதான விசாரணை என்பது விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை இலக்கு வைத்து கொண்டு வரப்பட்டது. ஆனால் விசாரணை அறிக்கை நான்கு அமைச்சர்களுக்கும் விக்கினம் தரக்கூடிய தாக அமைந்த போது அது அதிர்ச்சியைக் கொடுக்கவே செய்தது.

அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டதும் ஊடகங்கள் அதற்கு அதி கூடிய முன்னுரிமை கொடுத்தன. விசாரணை அறிக்கையின்படி சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? என்பது பற்றிய முடிவை அறிவிக்கும் பொறுப்பு வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடையதாக இருந்தது. அவர் விசாரணை அறிக்கையை சபையில் சமர்ப்பித்த பின்பு 14.06.2017 இற்கு சபை ஒத்திவைக்கப்பட்டது.

அமைச்சர்கள்மீதான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மீண்டும் சபை கூடுவதற்கு இடைப்பட்ட ஒருவார காலத்திற்குள் பல்வேறு ஊகங்களும் கருத்துக்களும் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருந்தன. பொதுமக்களிடமும் இவை ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தன.

14.06.2017 அன்று விடிகாலைப் பொழுதில் இருந்தே முதலமைச்சரின் அறிவிப்பு என்னவாக இருக்கும் என்ற ஆர்வம் அனைவரையும் ஈர்த்திருந்தது.

இதுகாறும் சபை கூடியதற்கும் அன்றையதினம் சபை கூடியதற்கும் இடையில் நிறைய வேறுபாடுண்டு. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அன்றைய தினம் ஒரு நீதியரசராக மாறியிருந்தார். தனது தீர்ப்பை வாசிப்பதுபோல தனது உரையை அமைத்துக் கொண்டார். அவர் தனது தீர்ப்புரையில்...

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 வேலைத் திட்டங்களை முன்னெடுக்க 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மீள் குடியேற்ற அமைச்சின் நடப்பாண்டுக்குரிய நிதியொதுக் கீடான 15, மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் பூநகரி கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் 5 வேலைத் திட்ட ங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

ரூபாவுமாக மொத்தம் 15 மில்லியன் ரூபா நிதி செல விடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ் நிலைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை வளப் படுத்தும் நோக்கில் அரசாங் கத்தினால் மத்திய கமநல அபிவிருத்தித் திணைக் களத்தின் ஊடாக கிளி நொச்சிமாவட்டக் கமநல அபிவிருத்தித் திணைக் களத்தின் கீழ் உள்ள பூநகரி கமநல சேவை நிலையத் தின் கீழ் 15 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப் படவுள்ளன.

இதற்கமைய, பூநகரி காத்தவராயன் கட்டு உவர் நீர் அணைக்கட்டு அமைக்க 3 மில்லியன் ரூபாவும், ஆலம் கேணி உவர் நீர் ஏரி அணைக்கட்டு அமைக்க 3 மில்லியன் ரூபாவும், கொல் லன் குறிச்சி உவர் நீர் ஏரி அணைக்கட்டு அமைக்க 3 மில்லியன் ரூபாவும், நல் லூர் உவர் நீர் ஏரி அணைக் கட்டு அமைக்க 3 மில்லியன் ரூபாவும், கௌதாரி முனை உவர் நீர் ஏரி அணைக்கட்டு அமைக்க 3 மில்லியன்

மடுத்திருப்பதியின் ஆடிமாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது

அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

(மன்னார்)

மன்னார் மறை மாவட் டத்தின் புனித ஸ்தலமான மடுத் திருப்பதியின் ஆடி மாத பெருவிழாவை முன் னிட்டு இறை மக்கள் கலந்து கொண்டு பாப்பர சரின் கொடியும், மடு அன் னையின் கொடியும் ஏற் றிவைக்கப்பட்டுள்ள தாக மடு மாதா ஆலைய பரி பாலகர் அருட் பணி எஸ். எமிலியான்ஸ் பிள்ளை அடிகளார் தெரிவித்துள்ளார்.

மடுத் திருப்பதியின் ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு கொடி ஏற்றும் ஆரம்ப நிகழ்வு கடந்த 23, ஆம் திகதி வெள்ளிக் கிழமை மடுமாதா ஆலயத் தின் ஆலய பரிபாலகர் அருட்பணி எஸ்.எமிலி யான்ஸ் பிள்ளை அடிக ளார் தலைமையில் பங்குத் தந்தையர்கள், அருட் சகோதரிகள், இறை மக் கள் கலந்துகொள்ள பாப் பரசரின் கொடியும் மடு அன்னையின் கொடியும் ஏற்றிவைக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து 9 தினங்களுக்கு மாலையில் திருச்செபமாலையுடன் நவ நாட்களும் நடை பெற்று எதிர் வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆயர்கள் கலந்து கொண்டு திருவிழா திருப் பலியை ஒப்புக்கொடுப்பார்கள்.

வழமையாக இவ் விழா வில் ஒவ்வொரு வருடமும் இரண்டு இலட் சத்துக்கு மேற்பட்ட பக் தர்கள் கலந்து கொள்வ தால் இம்முறையும் இவ் வாறு அமையும் என மடு பரி பாலகர் அருட்பணி எஸ். எமிலியான் ஸ் பிள்ளை அடிகளார் தெரி வித்தார். (2-15)

முறியும் நிலையில் மரக்கொப்புகள்; மக்கள் அச்சத்தில் நடமாட்டம்

(பரந்தன்)

பளைப் பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தை வளாகத்தில் முறியும் நிலை யில் பெரிய மரக்கொப்புகள் ஒரு மாதகாலமாக காணப் படுவதாக பொது மக்கள், வர்த்தகர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். அதனை அகற்று வதற்கு பிரதேச சபைக்கு தகவல் வழங்கியும் பளை பிரதேச சபை இதுவரை காலமும் எவ்வித நடவடிக் கையும் எடுக்கவில்லை என்று சந்தை வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் தற்போது காற்று வேகமாக வீசுவதால் எந்த வேளையிலும் கொப் புகள் முறிந்து விழும் அபாய நிலையை எட்டியுள்ளது.

இக் கொப்புகள் முறிந்து விழும் பட்சத்தில் பொருட் சேதம், உயிர்ச்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட் டப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் தாமதமின்றி மரக் கொப்புகளை வெட்டி அகற்ற முன்வர வேண்டுமென வர்த்தகர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்ற னர். (2-312)

"ஈதுல் மித்ர்" நோன்பு பெருநாள் தொழுகை முல் லைத்தீவு பெரிய பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதேவேளை முல்லைத்தீவு நீராவிப்பிட்டி பெரிய பள்ளிவாசலிலும் நோன்புப்பெருநாள் தொழுகைகள் நடை பெற்றன. இதில் இஸ்லாமிய மக்கள் தொழுகையில் பங்கேற்றதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்- மல்லாவி செய்தியாளர்)

புதிய அரசியலமைப்பு தொடர்பில் மூவின இளைஞர், யுவதிகளுக்கு விழிப்புணர்வூட்டல்

(குருமன்காடு)

புதிய அரசியலமைப்பு தொடர்பில் நாடுபூராகவும் விழிப்புணர்வூட்டும் செயற் பாட்டில் மூவின இளைஞர், யுவதிகள் ஈடுபடத் தொடங்கி யுள்ளனர்.

அன்புக்கும் நட்புக்கு மான வலையமைப்பின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதி களால் கடந்த 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள "மக்கள் ஆட்சிக்கான அர சியல் யாப்பு" எனும் தொனிப் பொருளிலான இவ் விழிப் புணர்வு செயற்றிட்டத்தின் கீழ் ஆயிரத்து 250 விழிப் புணர்வு கூட்டங்களை கிராம மட்டத்தில் நடத்து வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

கடந்த கால அரசியல் யாப்புக்களில் உள்ள குறை பாடே தமிழ் மக்கள் போராட வேண்டிய நிலைக்கு தள்ளியது. நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்த நாட்டில் உள்ள இனப் பிரச் சினையை தீர்ப்பதற்காக கொண்டு வருவதாக கூறப் படும் புதிய அரசியலமைப் பில் இனப்பிரச்சினையை தீர்க்கப்பட வேண்டும் என் பதை வலியுறுத்தியும், மூவின மக்களும் இன, மத, பேதமின்றி ஐக்கியமாக வாழ வழி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இந்த விழிப்புணர்வு நடைபெற்று வருகிறது.

இதில் மூவின இளை ஞர், யுவதிகள் ஆர்வத்து டன் கலந்து தமது கருத் துக்களையும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (2-250)

பலத்த காற்றினால் தூக்கி வீசப்பட்டது முன்பள்ளிக் கூரை

சிறிதரன் எம்.பி. நேரில் சென்று ஆராய்வு

கிளிநொச்சி உதய நகரில் அமைக்கப்பட்டுள்ள முன் பள்ளி ஒன்றின் கூரை வீசிய பலத்த காற்றினால் தூக்கி வீசப்பட்டது. கூரை வீசப்படும் போது முன்பள் ளிக் கட்டத்தினுள் மூன்று ஆசிரியர்கள், 30 இற்கு மேற்பட்ட சிறார்கள் ஆகியோர் இருந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியள வில் நடை பெற்றது.

இருப்பினும் அனை வரும் எந்தவித காயமும் இன்றி தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இதனையடுத்து பாரா ளுமன்ற உறுப் பினர் சி. சிறிதரன் குறித்த முன்பள்ளிக்கு விஜயம் செய்து கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், கிராம மட்ட அமைப்புக்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருடன் நடந்த சம்பவம் தொடர் பாகவும் இதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்தும் ஆயராய்ந்தார்.

இதன் போது குறித்த கிராமத்தின் கிராம அபி விருத்திச் சங்கத்தினர் முன் பள்ளியை புனரமைத்துத் தருவதாக கூறியுள்ளனர்.

சேதமடைந்த முன் பள்ளி எவ்வித அடிப்படை வசதிகள் எவையும் அற்று இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புளியங்குளம், புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. பக்த அடியார்கள் காலை முதல் தூக்குக்காவடி, பால் காவடி எடுத்தும் தீச்சட்டி ஏந்தியும், அங்க பிரதிஷ்டை செய்தும், பொங்கல் செய்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியிருந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெருமளவான பக்தர்கள் வருகை தந்து பொங்கல் நிகழ்வில் கலந்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டனர். புதூர் நாகதம்பிரானின் ஆலய மகிமையறிந்தும் அதன் நோய் தீர்க்கும் மண் பெறவும் பலரும் வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

அம்புலன்ஸ் வண்டி சாரதிகள் பணிப்புறக்கணிப்பு

அவசர சேவைகள் வழமைபோல் நடைபெறும்

(குருமன்காடு)

நாடளாவிய ரீதியில் பிரதான மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அம்புலன்ஸ் வண்டிச் சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அம்புலன்ஸ் வண்டிச் சாரதிகள் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கில் 222 அம்புலன்ஸ் வண்டிகளின் சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் நேற்றைய தினம் ஈடுபட்டிருந்தமையால் நோயாளர்கள் பெரும் அவதி அடைந்தனர்.

நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் பணிப் புறக்கணிப்பின் தொடர்ச்சியாக அகில இலங்கை மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கத்தின் வவுனியா மாவட்டத்தின் தலைவர் டி.ஜி.சரத்குமாரசிறி தலைமையில் வவுனியாவில் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சுகாதார திணைக்கள சாரதிகள் 11 பேருக்கு வேறு திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இரத்து செய்யவேண்டும்.

சகல மாகாணங்களிலும் சுகாதார திணைக்கள சாரதிகள் அத் திணைக்களங்களில் மாத்திரமே பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

சுகாதார மத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு அமைவாக அமைச்சரின் உத்தரவை மாகாண சுகாதாரத் திணைக்களங்களில் நடைமுறைப்படுத்தக் கோரியும் நாடளாவிய ரீதியில் மாகாண சுகாதார திணைக்கள சாரதிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை வவுனியா மாவட்டம் 49, கிளிநொச்சி மாவட்டம் 32, முல்லைத்தீவு மாவட்டம் 39, மன்னார் மாவட்டம் 39 ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த 159 சுகாதாரத் திணைக்கள சாரதிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பணிப் புறக்கணிப்பு நாட்களில் அவசர சேவைகள் வழமைபோல் முன்னெடுக்கப்படும் என அகில இலங்கை மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது. (2-250)

ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்வகைகள் போதியளவு நீரின்றி வாடுகின்றன

கால்நடைகளும் நீரின்றி அவதி

வவுனியா வடக்கு ஒலுமடு கிராம சேவகர் பிரிவிலுள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட நிலையில் போதியளவு நீரின்றி காணப்படுவதால் விவசாயப் பயிர்ச் செய்கையை கைவிடவுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா வடக்கு ஒலுமடு கிராமசேவகர் பிரிவில் விவசாயசெய்கையைமேற்கொண்டுவரும் விவசாய குடும்பங்கள் தற்போது தொடர்ச்சியான வரட்சிகாரண மாக்குளங்களில் நீர் வற்றிய நிலையில் கிணற்றின் நீர் மட்டம் குறைந்திருப்பதனால் பயிர்களுக்கு நீர் இறைப்பதற்கு போதியநீர் நீரின்றி இருப்பதனால் கிணறுகளை ஆழப்படுத்தும் நடவடிக்கைகளில் பாரிய இயந்திரங்களைக் கொண்டும் ஆழப்படுத்தியும் போதியநீர் கிடைக்காமையால் இடைநடுவில் விவசாய செய்கையினை கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் இப் பிரதேசத்திலுள்ள கால்நடைகள் கூட புல்லினங்கள் கருகிய நிலையில் மேய்ச்சல் தரையின்றி அலைந்து திரியும் மாடுகள் குடிதண்ணிக்கும் குளங்கள், மடுக்கள் என்பன நீர் வற்றியதனால் தவித்து கொண்டு திரிகின் றன. நீரின்றி அலைந்து திரியும் கால்நடைகள் சாகும் தறுவாயை எட்டியுள்ளன. குறிப்பாக மிளகாய், கத்தரி, பாகல், பயிற்றை வாழை வெங்காயம், புகையிலை கோவா, பூசணி, மரவள்ளி, கரட், பீற்றூட், தக்காளி போன்ற பயிர்ச் செய்கைகளும் மரக்கறிச் செய்கையும் பாதிப்படைந்துள்ளன.

இதேவேளை கிணறுகளை ஆழப்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் உதவிகளைச் செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

V3 foundation அமைப்பின் மூலம் வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் குப்பைக் கூடைகள் வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகத்தால் வழங்கி வைக்கப்பட்டதை படத்தில் காணலாம். (படம்:- ஓமந்தை செய்தியாளர்)

தபால் திணைக்கள ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

— தபால் சேவைகள் அனைத்தும் முடங்கின —

ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தபால் திணைக்கள ஊழியர்கள் மேற்கொண்டு வரும் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தால் தபால்துறை முடங்கி காணப்படுகின்றது.

இந் நிலையில் நேற்றைய தினம் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் தபால் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

திர்வாக ரீதியாக தாம் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு இதுவரையில் உரிய தீர்வுகள் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 24 மணி நேர பணிப் புறக்கணிப்பாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனியா தபால் ஊழியர்கள் நேற்றைய தினம் அதிகாலை 12 மணியில் இருந்து 24 மணிநேரம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் இதற்கான தீர்வு வழங்கப்படாத நிலையில் இன்று தொடக்கம் தொடர் போராட்டமாக நடத்த தீர்மானித்துள்ளனர்.

இதன் காரணமாக வவுனியா பிரதான தபால் நிலையம் உட்பட அனைத்து தபால் நிலையங்களும் மூடப்பட்டு காணப்பட்டன.

ஊழியர்கள் பணியில் இன்மையால் பல்வேறு தேவைகளுக்காகவும் தபால் நிலையங்களுக்கு வருபவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பி சென்றனர்.

மன்னார் அஞ்சல் அலுவலக பணியாளர்களும் நேற்று முதல் தமது பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக மன்னாரில் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் மூடப்பட்ட நிலையில் நேற்றைய காணப்பட்டன.

தற்போது உயர் தரம் சித்தி பெற்ற மாணவர்களது பல்கலைக்கழக அனுமதி கடிதங்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கும் மாபொல புலமைப்பரிசில் கடிதங்கள் போன்றன தேங்கும் நிலை காணப்படுகிறது. (2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறைவன் அருளால் நரிகளைப் பரிகளாக்கிய மாணிக்கவாசகர் குருபூசை தினம் இன்று

இறைவனால் ஆட் கொள் ளப்பட்ட சைவசமய குரவர் கள் நால்வருள் மாணிக்க வாசகரும் ஒருவராவர். மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டில் உள்ள திருவாத வூரில் சம்புபாத சிவாச்சாரி யார்க்கும் சிவஞானவதியாரு க்கும் மகனாகப் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர். திருவாதவூரில் அவதரித்தபடியால் திருவா தவூரர் என்னும் பெயரைப் பெற்றார். பாண்டிய நாட்டு மன்னனான அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரைத் தனது முதல் மந்திரியாக்கிய தோடு தென்னவன் பிரமரா யன் என்ற பட்டத்தையும் சூட்டி பல விருதுகளையும் வழங்கி னான். அரசரின் பணிப் பின் படி குதிரைகள் வாங்கச் சென்றபோது திருப்பெருந் துறையில் குருந்த மர நிழ லில் பரமாச்சாரியராக இரு ந்த இறைவனால் ஆட்கொள் ளப்பட்டு தன்னை மறந்து கொண்டுசென்றபொன்பொரு ட்கள் எல்லாவற்றையும் செல வழித்தார். தம்மை சீடராக ஏற் றுக் கொள்ளும்படி குருவை வேண்டிக் கொண்டார். குரு வும் அவருக்கு தீட்சை அளி த்து அருள்புரிந்தார்.

திருவாதவூரரின் செயற் பாடுகளை அறிந்த மன்னன் கோபம் கொண்டு அவரை உடனடியாக மதுரைக்கு வரும் படி ஓலை அனுப்பினான். ஆவணி மூல நன்னாளில் குதிரைகள் வருமென்று குரு வின் சொற்படி மாணிக்க வாச

மாணிக்கவாசகர்

கர் அரசனின் ஆட்களிடம் சொல்லி அனுப்பினார். கோபங் கொண்ட மன்னன் மாணிக்கவாசகரைச் சிறை யில் இட்டான். குறித்த நாளில் காட்டிலுள்ள நரிகளை எல் லாம் பரிகளாக்கி, இறைவனே குதிரை வணிகத் தலைவ னாக வந்து அரசனிடம் அவ ற்றை ஒப்படைத்தார்.

மன்னர் அதுகண்டு மகிழ் ந்து மாணிக்கவாசகரைச் சிறை யினின் றும் விடுவித்ததுடன் குதிரை வணிகத் தலைவருக் கும் சிற ப்புக்கள் செய்தான். அன்றிரவு குதிரைகளாக வந்த நரிகள் எல்லாம் மீண் டும் நரிகளாக காட்டுக்குள் ஓடியதுமட்டுமல்லாமல் நின்ற குதிரைகளையும் கடித்துக் குதறியது. இச் செய்தி அறி ந்த மன்னன் மாணிக்கவாச கரை அழைத்து வைகை ஆற் றுச் சுடு மணலில் அவரை நிறுத்தி நெற்றியில் கல்லே ற்றி வருத் தினான். மாணிக்க வாசகருக்கு அபயமளிக்க விரு ம்பிய இறைவன் வைகை ஆற்றை பெருக்கெடுக்கச்செய் தார். இதன் மூலம் மாணிக்க வாசக ரின் பெருமையை மன் னன் உணரும்படி செய்தார். பின்னர் தமது அமைச்சர் பத வியைத் துறந்த மாணிக்கவா சகர் பல தலங்களையும் தரி சித்துக் கொண்டு சிதம்பர த்தை சென்றடைந்தார். அங்கு இவரது திருவாசகப் பாடல்க ளைக் கேட்டு இன்புற்ற இை றவன் இவருக்கு மாணிக்க வாசகர் என்னும் நாமத்தைச் சூட்டினார்.

திருவாசகத்திற்கு உருகா தார் ஒரு வாசகத்திற் கும் உரு கார். தில்லையிலே ஊமைப் பெண்ணைப் பேச வைத்த மாணிக்கவாசகர் பௌத்தர் களை வாதில் வென்று சைவ சமயத்தின் மேன்மையை நிலைநாட்டினார். அந்தணர் வடிவில் வந்த தில்லைச் சிற் றம்பலவன் மாணிக்கவாசகர் திருவாசகத்தைப் பாடத்தாமே எழுதிக் கொண் டார். மறுநாள் கோயில் படி யில் ஏட்டுப் பிரதியொன்றை அந்தணர் கள் கண்டெடுத்த னர். அதில் வாதவூரன் விளம் பிட அம்பல வன் எழுதியது என்று எழுதப் பட்ட அடிக் குறிப் புக் காணப் பட்டது. மாணிக்க வாசகரின் அருமை பெருமைகளை உண ர்ந்த தில்லை வாழ் அந்தணர் கள் நீர் பாடிய பாடல்களுக்கு பொருள் யாது? என்று அவ ரைக் கேட்டனர். அவர்களை தில்லைக் கோவி லுக்கு அழைத்துச் சென்ற மாணிக் கவாசகர் அங்கு அம் பலத்த ரச னைச் சுட்டிக் காட்டி இவரே இதன் பொருள் எனக் கூறி விட்டு சிவசாயுச்சியம் அடை ந்தார்.

மாணிக்கவாசகர் திரு வாசகம், திருக்கோவையார் என்பவற்றைப் பாடியுள்ளார். இவை எட்டாந் திருமுறைகளா கத் தொகுக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரின் குரு பூசைத் தினம் ஆனி மாதத் தில் வரும் மக நட்சத்திர மா கும். சைவ சமயத்தை அழி யாது பேணிப் பாதுகாத்த மாணிக்கவாசகரின் குரு பூசைத் தினத்தை இன்று கொண்டாடுவது சைவசமய மக்களின் தலையாய கடமை மட்டுமன்றி அவர்களின் வழி முறைகளைப் பின்பற்றி இனி வருங் காலத்தில் சைவசம யம் மேன்மையுற முழுப் பங் களிப்பையும் வழங்குவதே சைவசமய மக்களாகிய நாம் அவர்களுக்கு செய்யும் கைமாறாகும்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குகஉலக மெல்லாம்

திருமதி.மலர்விழி கனகசபை,
கலாவித்தகர்,
கலைமாமணி,
உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)
தீவக கல்வி வலயம்,
வேலணை.

"இடர் தீர்ப்பாய் நயினைத் தாயே"

இராகம்- ஹிந்தோளம், தாளம்-ஆதி
பல்லவி

இன்னிசையால் என்றும் புகழ்பாடினேன் தாயே
இடர்களைந்து எம்மை ஆட்கொள்ளும் அம்மா
(இன்னிசையால்)

அனுபல்லவி

இவ்வுலக வாழ்வில் இன்பங்களா வேண்டினேன்
இணையடி தொழுதிடவே என்றுமே வரமருள்வாளி
(இன்னிசையால்)

சரணம்

வேண்டுவார் வேண்டும் நல்வரமருளும் தாயே
வேறு கதியறியேன் உன்னிடம் சரணடைந்தேன்
கலைக்க மதைத் தீர்க்க கடைக்கண் பாராயோ
நாடினேன் நயினை நாகபூஷணித்தாயே உனையே.
(இன்னிசையால்)

கலாவித்தகர், கலைமாமணி
திருமதி-மலர்விழி-கனகசபை
சண்டிலிப்பாயி

அருளும் நிதி

கலைஞானம் சொல்லுகின்ற நயினைப்பதி-இங்கு
கரையெங்கும் அலைவந்து சொல்லும் கவி
அலைகடல் தாண்டி வந்தாலே அருளும் நிதி
அபிராமித் தாயே நீயே கதி

பூக்கொண்டு நாகங்கள் வந்து- உன்னை
பூசித்த வரலாறு உண்டு
காக்கின்ற தெய்வமே என்று- இந்த
காசினி போற்றுதே இன்று

மணியல்லவம் என்று கூறு
மனத்துன்பங்கள் யாவுமே நீறு
அணிசெய்யும் படகுகள் மீது-உன்
அடியார்கள் வருவதே அழகு

பிணிநீக்கி, பசிநீங்கும் தாயே
பித்தனின் அருகமர்ந்த துணையே -உன்
மணியோசை கேட்டாலே போதும்
மலைமகளே என்று மனம் ஓதும்

கனே-பாக்கியன் , வேலணை.

சிவபூமி மணித்தீவின் மங்கையே!

சித்தமெலாஞ் சிவமயம் சீர்பெற்றோங்க
சிவபூமி மணித்தீவின் மங்கைமீது
சித்தர்களும் புலவர்களும் பாடல்பாடி
சிறந்தபேரி ன்பத்துள் திளைத்து நிற்க
முத்தமிழோடி லக்கியத்தை குழைத்தும் ஊட்டி
மங்காத புகழோடு குலங்கள் யாவும்
நித்தமுன் னருட்பார்வை நாடித்தேட
தேவிநாக ஈஸ்வரி யம்மை தானே

நயினை க.க.அரவிந்தன்

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சி

நீதியமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டினுள் சிலர் மத நல்லிணக்கத்தை சீர்குலை க்க முயற்சிகளை மேற்கொ ண்டு வருவதாக நீதிமன்ற மற்றும் புத்தசாசன அமைச் சர் விஜேதாஸ ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவ்வாறான தரப்பின ருக்கு எதிராக எடுக்கவேண் டிய முக்கிய நடவடிக்கை களை முன்னெடுக்கவுள்ள தாக அரசாங்கம் தெரிவித் துள்ளது.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கல ந்து கொண்டு உரையாற்றிய

போதே அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ இந்த கருத்தை வெளியிட்டார். (இ-7)

கொழும்பு பங்குச் சந்தை பட்டியலில் மகிந்தவின் மகன்கள் முன்னணியில்

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தை யில் பட்டியலிடப்பட்ட நிறுவ னங்களின் பிரதான 20 பங்குதாரர்களில் ராஜபக் ஷர் களும் இடம்பிடித்து ள்ள தாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள் ளது.

இந்தப் பட்டியலில் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் மகன் நாமல் ராஜ பக்ஷ மற்றும் யோஷித ராஜ பக்ஷ ஆகிய இருவரின் பெயர் கள் உள்ளடக்கப்பட்டுள்ள தாக தகவல் வெளியாகியுள் ளது.

கொழும்பு பங்குச் சந்தை யில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனமான எஸ்கொட் லங்கா பீ.எல்.சீ (Ascot Lan ka Plc) நிறுவனத்தின் பங் குகளை கொள்வனவு செய்த மையின் ஊடாகவே குறித்த இருவரும் பங்குதாரர்களா கியுள்ளனர்.

இந்த நிறுவனத்தை கொள் வனவு செய்ய நாமல் ராஜ பக்ஷ மற்றும் யோஷித ராஜ பக்ஷவுக்கு இவ்வளவு பெரிய பணத்தொகை எப்படி கிடைத் ததென நிதி மோசடி விசாரணை பிரிவினால் தற்போது விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டு ள்ளன. நிறுவனத்தின் சர்வ தேச நிதி அறிக்கைக்கமைய இந்த நிறுவனத்தின் பிரதான பங்குதாரர்கள் 10 பேரில் ராஜபக்ஷ சகோதரர்கள் உள் ளடங்கியுள்ளனர்.

பங்குச் சந்தையில் இது தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட கொடுக்கல்-வாங்கல் மற்றும் தகவல்கள் தொடர் பில் நிதி மோசடி விசார ணைப் பிரிவினால் விசா ரணை மேற்கொள்ளப்படுகி ன்றது.

அத்துடன் இந்த நிறுவ னத்தின் பங்குகளை கொள் வனவு செய்வதற்காக பணம் கிடைத்த முறை தொடர்பில் எதிர் வரும் காலங் களில் நாமல், யோஷிதவிடம் விசா ரணை மேற்கொள்ளப்பட வுள்ளது.

நாமல் ராஜபக்ஷ மற்றும் யோஷித ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் மீது நிதி தூய்மையாக்கல் மற்றும் நிதி மோசடி தொடர்பில் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப் படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சாசனம் குறித்து சு.கவினர் மீண்டும் பேச்சு

அரசியல் சாசனம் குறித்து மீளவும் சுதந்திரக் கட்சிக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

உத்தேச அரசியல் சாசனம்எவ்வாறு அமைய வேண்டுமென இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னதாக அரசியல் சாசனம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்தகட்ட பேச்சுவார்த்தையின் போது கூட்டு எதிர்க்கட்சியினரையும் இணைத்துக் கொள்ளப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

மாத்தறையில் வீடொன்றிலிருந்து நால்வரின் சடலங்கள் நேற்று மீட்பு!

(கொழும்பு)

மாத்தறை கம்புறுப்பிட்டிய பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து மூன்று பிள்ளைகள் அடங்கலாக நால்வரின் சடலங்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

குறித்த பிள்ளைகளின் தந்தை வீட்டின் கூரையில் தூக்கிட்டு தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் உடல்களில் எரிகாயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

16, 14 மற்றும் 10 வயதான பிள்ளைகளே உயிரிழந்துள்ளதுடன், அவர்களில் இருவர் பெண் பிள்ளைகள் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

அகில உலக கிருஷ்ண பக்திக் கழகம் யாழ்ப்பாணம்

ஸ்தாபக ஆச்சாரியார் தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

'நவ விருந்தாவனம்'

ஒவ்வொரு ஞாயிறும் சிறப்பு பூசை, வழிபாடு

மதியம் 11.30 மணியில் இருந்து 1.45 மணிவரை

பஜனை, ராஜபோக ஆராதனை, சடாரி சேவை, பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதத்தில் இருந்து பக்தி யோகத்தைப் பற்றிய உபநியாசம், சிறுவர்களுக்கான பக்தி வேதாந்த நெறிக் கல்வி, மந்திர தியானம் ஆகியவற்றில் கலந்து கொண்டு ஸ்ரீஸ்ரீ கிருஷ்ண பகவானின் பிரசாதத்தை உண்டு மகிழுங்கள்.

பிரதம விருந்தினராக தவதிரு.பக்திமுகுந்த சுவாமி (மலேசியா) அவர்களினி பகவத்கீதை. ஸ்ரீமதியாகவதத்திலிருந்து ஆனிமீக சொற்பொழிவு இடம்பெறும்.

இந்த நிகழ்ச்சிகளில் இனிதாக நேரத்தை செலவிட உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல, 203, கந்ததயா உபாத்தியாயர் வீதி,
உடுவில், சுன்னாகம்.
077 44 50 108
WWW.ISKCONJAFFNA.COM

உளவாளி என்ற குற்றச்சாட்டை என்னால் ஏற்கவே முடியாது

உதய கம்மன்பில கூறுகிறார்

தாம் உளவாளியாக செயற்பட்டதாக சுமத்தும் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் அங்கம் வகித்த போது முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் உளவாளியாக செயற்பட்டதாக சுமத்திய குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் ஜாதிக ஹெல உறுமயவின் மற்று மொருவர் உளவாளியாக செயற்பட்டார் எனக் குறிப்பிட்டுள்ள அவர் தற்போதைய அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிற்கு நெருக்கமான ஒருவர் உளவுப் பணியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
யாரிடம் பேசுவது?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளை நீங்களே தீர்த்துக்கொள்ள உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும்
இயங்கும் இலவச சேவை. மத சார்பற்றது.

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(021) 222 8117 / 077 900 8776

(தினமும் காலை 9.00 - 1.00)

வவுனியாவில்: (024) 324 4444

சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00

(Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: திருவாதிரை உயரம்: 5' 5'' தகைமை/தொழில்: A/L அரசதொழில் தொ.இ: B/7489	பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: திருவாதிரை கி.பா: 35 செவ் 2இல் தகைமை/தொழில்: HNDE, BA, MA/ ஆசிரியர் தொ.இ: G/6557
பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: அச்சுவினி உயரம்: 5'5" தகைமை/தொழில்: O/L சொந்ததொழில் தொ.இ: B/7490	பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்: கார்த்திகை கி.பா: 32 உயரம்: 5'3" தகைமை/தொழில்: A/L எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் தொ.இ: G/6565
பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: சுவாதி உயரம்: 5'5" தகைமை/தொழில்: BSc/MSc/ QS சிங்கப்பூர் தொ.இ: B/7491	பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: உத்தராடம் கி.பா: 35 உயரம்: 150cm தகைமை/தொழில்: Bsc/அரசதொழில் தொ.இ: G/6567
பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: திருவோணம் கி.பா: 50 உயரம்: 5'4" தகைமை/தொழில்: A/L/பெல்ஜியம் தொ.இ: B/7492	பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: பரணி உயரம்: 5'6" தகைமை/தொழில் : A/L எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் தொ.இ: G/6570

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

அ.தி.மு.கவில் மோதல் வலுக்கிறது



(சென்னை)

அ.தி.மு.க. பொதுச்செயலாளராகவும், தமிழக முதலமைச்சராகவும் இருந்த ஜெயலலிதா மரணம் அடைந்ததை தொடர்ந்து அக்கட்சியில் பிளவு ஏற்பட்டது.

சசிகலா தலைமையில் அ.தி.மு.க: (அம்மா) என்ற பெயரில் ஓர் அணியும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அ.தி.மு.க. (புரட்சித் தலைவி அம்மா) என்ற பெயரில் மற்றொரு அணியும் செயற்பட்டு வருகிறது. அ.தி.மு.க. (அம்மா) அணியைச் சேர்ந்த எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருக்கிறார். சசிகலா சிறை சென்ற பிறகு அ.தி.மு.க. (அம்மா) அணிக்கு துணை பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தலைமை ஏற்றார்.

இரட்டை இலைச் சின்னத்தை பெற லஞ்சம் கொடுத்ததாக எழுந்த புகாரை தொடர்ந்து தினகரன் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்ட நேரத்தில், அ.தி.மு.க. (அம்மா) அணியின் பணிகளை கவனிக்கும் பொறுப்பை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி ஏற்றார். அதன்பிறகு எடப்பாடி பழனிச்சாமி பெயரிலேயே கட்சி அறிவிப்புகள் வெளிவந்தன.

இதைத்தொடர்ந்து, கட்சியை காப்பாற்றவும், இரட்டை இலைச் சின்னத்தை மீட்டெடுக்கவும் அ.தி.மு.க. (அம்மா), அ.தி.மு.க. (புரட்சித்தலைவி அம்மா) அணிகளை இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அந்த முயற்சி கைகூடாமல் போனது. இந்த நிலையில், பிணை பெற்று டில்லியில் இருந்து சென்னை திரும்பிய டி.டி.வி. தினகரன், கட்சிப் பணிகளை மேற்கொள்ளப்போவதாக அறிவித்தார்.

அவருக்கு அ.தி.மு.க. (அம்மா) அணியைச் சேர்ந்த 34 எம்.எல்.ஏக்களும் அமைச்சர்கள் சிலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஆனால் எடப்பாடி பழனிச்சாமி ஆதரவு எம்.எல்.ஏக்கள் அவரது வருகையை விரும்பவில்லை. இதனால் அ.தி.மு.க. (அம்மா) அணிக்குள்ளேயே புகைச்சலும், எதிர்ப்பும் உருவானது.

யார்தலைமையில்இயங்குவது? என்பதில் அ.தி.மு.க. (அம்மா) அணியில் தினகரன்-எடப்பாடி பழனிச்சாமி ஆதரவு எம்.எல்.ஏக்கள் இடையே மெல்ல, மெல்ல பனிப்போர் ஏற்பட்டது. இந்த பனிப்போர் வலுத்து இருதரப்பு எம்.எல்.ஏக்களும் தற்போது மாறி மாறி வெறுப்பு கருத்துகளை வெளியிட தொடங்கியுள்ளனர்.

அ.தி.மு.க. (அம்மா) அணியின் சார்பில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடந்த ரம்ழான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் தினகரனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதைக் கண்டிக்கும் வகையில் அந்நிகழ்ச்சியில் தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் பெரும்பாலானோர் கலந்து கொள்ளவில்லை.

சட்டசபையிலும் எடப்பாடி பழனிச்சாமி-தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் இடையில் மோதல் ஏற்பட்டது. தனக்கு பேச வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று கூறி தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ. தங்கதமிழ்ச்செல்வன் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தார். தினகரனை ஆதரிக்கும் மற்றொரு எம்.எல். ஏவான வெற்றிவேல், அமைச்சர் ஜெயக்குமாருக்கு சவால் விடும் வகையில் சட்ட சபையில் பேசினார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் பா.ஜனதா வேட்பாளருக்கு யார் முதலில் ஆதரவு தெரிவிப்பது என்பதில் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையே யான மோதல் பகிரங்கமாக வெளிச்சத்துக்கு வந்தது.

பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரையிடம் பா.ஜனதா ஆதரவு கேட்டதை தொடர்ந்து, அவர் பெங்களூர் சிறையில் சசிகலாவை சந்தித்து பேசினார். அந்த நேரத்தில், கட்சியின் தலைமை அலுவலகத்தில் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்திய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, ஜனாதிபதி தேர்தலில் பா.ஜனதா வேட்பாளரை ஆதரிப்பதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து சில நாட்களில் தினகரன் சார்பிலும் பா.ஜனதா வேட்பாளரை ஆதரிப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் டில்லியில் பேட்டி அளித்த தம்பிதுரை, சசிகலாவின் உத்தரவின் பேரிலேயே அ.தி.மு.க. (அம்மா) அணி பா.ஜனதாவுக்கு ஆதரவு அளித்ததாக கூறினார்.

அவரது இந்த கருத்தை எடப்பாடி பழனிச்சாமி ஆதரவு எம்.எல்.ஏக்களும், எம்.பிக்களும் கடுமையாக எதிர்த்தனர். எடப்பாடி பழனிச்சாமி சார்பிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் உண்மையில் யாருடைய உத்தரவின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டது? கட்சி யார் தலைமையில் இயங்குகிறது? என்பதில் அ.தி.மு.க. (அம்மா) அணி தொண்டர்களுக்கு குழப்பம் ஏற்பட்டு உள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சட்டசபை வளாகத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த கோ.அரி எம்.பி. (அரக்கோணம்), அருண்மொழிதேவன்எம்.பி (கடலூர்), முருகுமாறன் எம்.எல்.ஏ. ஆகியோர், சசிகலா குடும்பத்தை கட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் எடப்பாடி பழனிச்சாமியே கட்சிக்கும், ஆட்சிக்கும் தலைமை வகிக்க வேண்டும் என்றும், எடப்பாடி பழனிச்சாமி உத்தரவுப்படியே ஜனாதிபதி தேர்தலில் பா.ஜனதாவுக்கு ஆதரவு அளிக்கப்படடது என்றும் வெளிப்படையாக தெரிவித்தனர். தம்பிதுரை கருத்துக்கு எதிர்ப்பும் தெரிவித்தனர்.

இவர்களின் பேச்சுக்கு தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் வெற்றிவேல், தங்கதமிழ்ச்செல்வன் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்தனர். அவர்கள் கூறுமபோது, சசிகலா விருப்பப்படியே பா.ஜனதாவுக்கு ஆதரவு அளிக்கப்பட்டுள்ளது என்றும், சசிகலா குடும்பத்தை கட்சியில் இருந்து யாரும் வெளியேற்ற முடியாது என்றும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தற்போது, தினகரன் ஆதரவு அமைச்சரான ராஜேந்திர பாலாஜி, முன்னாள் அமைச்சரும் செய்தித்தொடர்பாளருமான வைகைச்செல்வனை கடுமையாக தாக்கி பேசி இருக்கிறார்.

ராஜேந்திர பாலாஜி

வைகைச்செல்வன்

வைகைச்செல்வன் 500 ரூபாய் பேச்சாளர் என்றும், கலப்படம் செய்யும் தனியார் பால் நிறுவனங்களிடம் பணம வாங்கிக் கொண்டு தனக்கு எதிராக கருத்து தெரிவித்து இருப்பதாகவும் அவர் குற்றம சாட்டியுள்ளார். அவருடைய இந்த கருத்துக்கு வைகைச்செல்வன் தக்க பதிலடி கொடுத்து இருக்கிறார். ராஜேந்திர பாலாஜி தூக்கிய பசை வாளியை கீழே வைக்காமல் வீதி வீதியாக சென்று சினிமா போஸ்டர் ஒட்டியவர் என்றும், அ.தி.மு.கவின் கோட்டையாக வளங்கிய விருதுநகர் மாவட்டத்தை தி.மு.க.வுக்கு தாரை வார்த்து கட்சியை புதை குழிக்குள் தள்ளியவர் என்றும் சாடி இருக்கிறார்.

இவர்கள் இருவரும் ஒரு புறம் மோதிக் கொண்டிருக்க மற்றொரு புறம் கோ.அரி எம்.பிக்கும், வெற்றிவேல் எம்.எல்.ஏவுக்கும் மோதல் ஏற்பட்டுள்ளது.

திருத்தணியில் பேட்டி அளித்த கோ.அரி, குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றும், அ.தி.மு.கவை விட்டு சசிகலா, தினகரன் குடும்பத்தினர் நிரந்தரமாக விலகவேண்டும் என்றும் கூறினார்.

அவர் இவ்வாறு கூறியதற்கு வெற்றிவேல் கடும் கண்டனம் தெரிவித்தார். இவ்வாறு பேசும் கோ.அரி போன்றவர்களை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கண்டிக்கவேண்டும் என்றும், இல்லையேல் தவறு செய்தவர்களை எப்படி கிள்ளி எறிவது என்று தங்களுக்கு தெரியும் என்றும் தெரிவித்தார்.

ஆனால் இப்படி அ.தி.மு.க. அம்மா அணியினர் மாறுபட்ட கருத்துகளை தெரிவித்து சிக்கல்களை உருவாக்குவது குறித்து எடப்பாடி பழனிச்சாமியோ அல்லது தினகரனோ இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்காமல் மௌனம்காத்துவருகின்றனர்.

இதனால் அ.தி.மு.கவில் நாளுக்குநாள் மோதல் வலுத்து வருகிறது. (இ-3)

ஆர்ஜென்டினாவில் பேருந்து விபத்து

15 பேர் உயிரிழப்பு

(மென்டோஸா)

ஆர்ஜென்டினாவின் மென்டோஸா மாகாணத்தில் நடனக் குழுவொன்று பயணித்த பேருந்து விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான பேருந்தில் சுமார் 50 பேர் பயணித்ததாகவும் உயிரிழந்தோரில் பலர் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினாவின் தலைநகர புவனஸ் அயிரிஸிலிருந்து புறப்பட்ட குறித்த பேருந்து, மென்டோஸாவில் நடத்தப்படவிருந்த நடனப் போட்டியொன்றில் கலந்துகொள்ளும் பொருட்டு சிறுவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களை ஏற்றிச் சென்றுள்ளது.

இந்த பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்ததைத் தொடர்ந்தே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்படும் போதும், குறித்த விபத்துக்கான சரியான காரணத்தை கண்டறியும் பொருட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

பயங்கரவாதிகளின் பிடியி
அல் - பாரூக் பகுதி இராணு

(பக்தாத்)

ஈராக்கில் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த, மொசூல் நகரத்தின் அருகே உள்ள அல்-பாரூக் பகுதியை இராணுவத்தினர் மீட்டு தங்கள் வசம் கொண்டு வந்தனர்.

ஈராக் நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பல்வேறு இடங்களில் தாக்குதல்

ஹிஸ்புல் அமைப்பின் தலை
சலாவுதீன் சர்வதேச பயங்கர

அமெரிக்கா அறிவிப்பு

(ஜம்மு)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இயங்கும் ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பின் தலைவராக இருக்கும் சலாவுதீனை சர்வதேச பயங்கரவாதி என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இயங்கும் ஹிஸ்புல முஜாகிதீன் தீவிரவாத அமைப்பின் தலைவராக இருக்கும் சலாவுதீனை சர்வ தேச பயங்கரவாதி என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இயங்கும் தீவிரவாத அமைப்பு ஹிஸ்புல் முஜாகிதீன்.

இதன் தலைவராக இருப்பவர் சலாவுதீன். இந்த அமைப்பு இந்தியாவில் பல்வேறு நாச வேலையில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

இந்தியா அமெரிக்காவுடன் இணைந்து சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிக்கும்

பிரதமர் மோடி அமெரிக்காவில் நம்பிக்கை

(வோஷிங்டன்)

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் இணைந்து சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் பொருட்டு முனைப்புடன் செயற்பட்டு வருவதாக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி இந்தியா- அமெரிக்கா சேர்ந்து செயற்பட்டால் இரு நாடுகளும் மட்டுமன்றி உலகமே பயன்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

தனது அமெரிக்க பயணம் தொடர்பாக அந்த நாட்டு பத்திரிகையான வால் ஸ்ட்ரீட் ஜெர்னல்' என்னும் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். உலக அளவில் நிலையற்ற பொருளாதார சூழ்நிலை நிலவுகின்றது.

இந்த நிலையில் இரு நாடுகளும் பல்வேறு நாடுகளிலும் இணைந்து செயற்படுவது அவசியமானது.

அரசியல் அமைப்பு மற்றும் நாட்டின் வளர்ச்சி ஆகியவற்றில் இரு நாடுகளும் சமமானவை. இந்தியா அமெரிக்காவிற்கான வர்த்தகம் ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றது என்றும், குறித்த கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

இரசாயன ஆயுத தாக்குதல் திட்டம்; சிரியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான சிரியா அரசு கிளர்ச்சியாளர்கள் மீது மீண்டும் இரசாயன தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

சிரியா நாட்டின் ஜனாதிபதியாக பசர் அல் ஆசாத் இருந்து வருகிறார். அவருக்கு எதிராக ஒரு பிரிவினர் போராடி வருகிறார்கள். இதனால் அங்கு 6 ஆண்டுகளாக உள்நாட்டு சண்டை நடந்து வருகிறது.

ஜனாதிபதிக்கு எதிராக செயற்படுபவர்கள் புரட்சி படை ஒன்றை தொடங்கி போரிட்டு வருகிறார்கள். இந்தப் படைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்து வருகிறது. அதே நேரத்தில் அரசுக்கு ரஷ்யா ஆதரவாக உள்ளது.

உள்நாட்டு போரை பயன்படுத்தி ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

பல பகுதிகள் புரட்சிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இரு பகுதிகளையும் மீட்பதற்கு சிரிய இராணுவம் தொடர்ந்து போரிட்டு வருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் புரட்சிப்படையினர் கட்டுப்பாட்டில் இருந்த கான்ஷேக்வுன் என்ற நகரை மீட்பதற்கு இராணுவம் தாக்குதல் நடத்தியது. அப்போது இரசாயன குண்டுகளை வீசியது.

நரம்பு மண்டலத்தை உடனடியாக பாதித்து உயிரைப் பறிக்கும் மிக மோசமான குண்டுகள் வீசப்பட்டன.

இதில் புரட்சிப்படை வீரர்களும், அப்பாவி பொது மக்களும் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

மேலும், இரசாயன ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக கூறி ஷயாரத் விமானப்படை தளத்தையும் தாக்கியது.

மத்திய தரை கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானம் தாங்கி கப்பலில் இருந்து 59 குண்டுகள் வீசப் பட்டன.

இந்த நிலையில் மீண்டும் சிரியா இரசாயன தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருப்பதாக கூறியதற்கு அமெரிக்க கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சர்வதேச சமுதாயத்தின் எச்சரிக்கையையும் மீறி சிரியா தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. எந்த நேரத்திலும் இந்த தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

மீண்டும் இரசாயன ஆயுதத்தை பயன் படுத்தினால் அதற்கு சரியான பதிலடி கொடுப்போம். கடும் விளைவுகளை சிரியா சந்திக்க வேண்டியது வரும். இவ்வாறு அதில் மேலும்கூறப்பட்டுள்ளது. (இ-3)

...யிலிருந்த ...ணுவ வசம்

...நடத்தி அந்த பகுதிகளை தங்கள் கட் டுப்பாட்டுக்குள் வைத்து உள்ளனர். அவர்களை எதிர்த்து இராணுவத்தினர் போரிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த, மொசூல் நகரத்தின் அருகே உள்ள அல்-பாரூக் பகுதியை இராணுவத்தினர் மீட்டு தங்கள் வசம் கொண்டு வந்தனர்.

அல்-பாரூக் பகுதியில் உள்ள பாரம்பரியமிக்க அல்-நூரி மசூதியை கடந்த வாரம் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி அழித்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

...ரும் ஐ. ...ரவாதி ...ு இடங் ...க்குதல்

...லைவர் ...கரவாதி

...டுப்பட்டு வந்துள்ளது.

இதன் தலைவராக இருக்கும் ...ாவுதீன் பாகிஸ்தான் தீவிரவாதி ...ளுடன் இணைந்து அச்சுறுத்தலை ...ற்படுத்தி வருகிறார்.

இந்நிலையில் நேற்று அந்த ...மைப்பின் தலைவரான சலா ...தீனை சர்வதேச பயங்கரவாதி ...ன்று அமெரிக்கா அறிவித்துள் ...ளது. (இ-3)

வெள்ளை மாளிகையில் பிரதமர் மோடிக்கு செங்கம்பள வரவேற்பு

(வோஷிங்டன்)

வெள்ளை மாளிகை சென்ற இந்திய பிரதமர் மோடிக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் ட்ரம்ப் தனது மனைவியுடன் இணைந்து பிரதமர் மோடியை வரவேற்றார்.

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் சுற்றுப் பயணமாக அமெரிக்க சென்றுள்ளார். இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 1.40 மணியளவில் வெள்ளை மாளிகை சென்றடைந்தார்.

அவருக்கு வெள்ளை மாளிகையில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன் பிரதமர் மோடியை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது மனைவியுடன் இணைந்து வரவேற்றார்.

அப்போது மிகச்சிறந்த பிரதமரான மோடி அமெரிக்கா வந்திருப்பது பெருமை அளிக்கிறது என்றும், பொருளாதார ரீதியாக சிறப்பாக செயற்பட்டு வருவதாக பிரதமர் மோடிக்கு ட்ரம்ப் புகழாரம் சூட்டினார்.

இந்த வரவேற்பு எனக்கு அளித்த வரவேற்பு அல்ல. கோடிக்கணக்கான இந்தியர்களுக்கான வரவேற்பு என்று பிரதமர் மோடி தெரிவித்தார். (இ-3)

ஆந்திராவில் இரண்டு வாரங்களில் பழங்குடியினர் 15 பேர் பலி

(ஆந்திரா)

ஆந்திராவின் பழங்குடியினர் கிராமத்தில் வசித்து வந்த கிராமத்தினர் வாந்தி, வயிற்றுப்போக்கால் அவதிப்பட்டு கடந்த 2 வாரங்களில் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் சவராயீ என்ற வனப்பகுதி கிராமம் உள்ளது. பழங்குடி மக்கள் வசித்து வரும் இங்கு கடந்த மாதம் 29ஆம் திகதி ஒரு திருமண விழா நடந்தது.

இதில் விருந்து சாப்பிட்ட அந்த கிராம மக்களுக்கு, சில நாட்களுக்குப்பின் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்பட்டன. அந்த உணவில் ஏதாவது நச்சு இருந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

வாந்தி, வயிற்றுப் போக்கால் அவதிப்பட்ட கிராமத்தினர் பல்வேறு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட் னர்.

எனினும் சிகிச்சை பலனளிக்காமல் கடந்த 2 வாரங்களில் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுபெற்றவர்களுக்கு இனிமேல் இராஜதந்திரப் பதவி கிடையாது

வெளிவிவகார அமைச்சர் உறுதி

இராஜதந்திர சேவையில் கல்விப் புலமை மற்றும் ஆற்றல்கொண்டவர்களுக்கே நியமனங்கள் வழங்கப் படும் என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச் சராகப் பதவியேற்ற பின்னர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் முதல் முறை யாக மல்வத்தை பீடத்தின் மகா நாயக்கர் திப்பொட்டு வாவே சிறிசித்தார்த்த சுமங் கல தேரரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

இதன்போதே அவர் இராஜதந்திர சேவையில் கல்விப் புலமை மற்றும் ஆற்றல் கொண்டவர்க ளுக்கே நியமனங்கள் வழங்கப்படும் என்று மகா நாயக்க தேரரிடம் உறுதி யளித்துள்ளார்.

"ஓய்வு பெற்றவர்கள் இனிமேல் இராஜதந்திர சேவையில் சேர்த்துக் கொள் ளப்பட மாட்டார்கள்.

இலங்கையின் தூதுவர் கள் வெளிநாடுகளில் நாட் டின் பெயரைக் கட்டியெழுப்ப வேண்டும். வெளிநாடு களில் நாட்டைப் பிரதிநிதித் துவம் செய்பவர்கள், அதற்கு ஏற்றவர்களாக இருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இலங் கையின் இராஜதந்திரிக ளாக 60 பேருக்கு மேல் உள்ளனர். அவர்களில் பலர் தகுதியற்றவர்கள். அவர்கள் திருப்பி அழைக்கப்படுவார் கள்.

முன்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங் கள சமரவீர தனது பதவிக் காலத்தில் நாட்டுக்காக மிக முக்கியமான பங்கை ஆற் றியிருக்கிறார்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

ஜப்பானிய பொலிஸார் மீது இலங்கையர்கள் தாக்குதல்

இலங்கைத் திருவிழாவில் சம்பவம்

(கொழும்பு)

டோக்கியோவில் இலங் கைத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் ஜப்பானிய பொலிஸார் சிலர் தாக்கப் பட்டதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

கடந்த வார இறுதியில் இலங்கைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யொயோகி பூங் காவில் இலங்கைத் திரு விழா ஒழுங்கு செய்யப்பட்டி ருந்தது.

இந்த நிகழ்விலேயே ஜப் பானிய பொலிஸார் சிலர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இலங்கையர்கள் சிலரே இந்த தாக்குதலை நடத்தி யதாக கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஜப் பானிய பொலிஸார் விசார ணைகளை ஆரம்பித்துள் ளனர்.

மோதலில் ஈடுபட்டவர்கள் மதுபோதையில் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர் பாக கொழும்பிலுள்ள ஜப் பானியத் தூதரகத்திடம் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று கேள்வி எழுப்பியிருந்த போதிலும் அதற்கான பதில் அளிக்கப்படவில்லை.

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக, ஜப்பானிய வெளி விவகார அமைச்சு, இலங் கைத் தூதரகத்திடம் விளக் கம் கோரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (இ-7)

தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்கு அமைச்சர்கள் செவிசாய்க்க வேண்டும்

அமைச்சர் அமரவீர அறிவுரை

(கொழும்பு)

சர்வதேச முதலீடுகள் தடுக்கப்பட போராட்டங்களே காரணம். ஆகவே தொழிற் சங்கங்களின் கோரிக் கைக்கு அமைச்சர்கள் செவிசாய்க்க வேண்டும் என ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள தொடர்புகள் நீங்கி விட்டது. அரசாங்கத்தை எதிர்த்து தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் போராட் டங்கள் அரசாங்கத்தையே பாதிக்கும்.

ஆகவே தொழிற் சங்கங் களின் கோரிக்கைக்கு அமைச்சர்கள் செவிசாய்க்க வேண்டும். சர்வதேச முத லீடுகள் தடுக்கப்படவும் இந்த போராட்டங்களே காரணம்.

நாட்டில் இடம்பெற்று வரும் தொடர் போராட்டங்கள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று கருத்து தெரிவிக்கும் போதே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

மதுவுக்கு பணம் கேட்டு தாயை கொடூரமாக தாக்கிய மகன் கைது

மது அருந்துவதற்கு பணம் கொடுக்கவில்லை என தாயை மிகக் கொடூரமாக தாக்கிய மகனை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

ஊரகஸ்மங்ஹந்திய பிர தேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மது அருந்துவதற்கு பணம் வழங்கவில்லை என ஆத்திரமுற்ற மகன் தாயை கொடூரமாக தாக்கி யுள்ளார்.

தாக்குதல் நடத்திய நபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு அல்பிட்டிய நீதவான் நீதி மன்றம் நேற்று உத்தரவிட் டுள்ளது.

சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் குறித்த பின்புறத்தில் மது அருந்திக் கொண்டிருந்தார் என தெரி விக்கப்படுகிறது.

ஊரகஸ்மங்ஹந்திய பகு தியைச் சேர்ந்த 23 வய தான நபர் ஒருவரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள் ளார்.

கால்களிலும் தலையி லும் பலத்த காயங்களுக்குள் ளான தாய் வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

எப்படிப் பயன்படுத்திக்கொள்வது?

வாழ்க்கைப் பிரச்சினைகள் அதிகமாக வருவதும் மக்கள் பெருக்கம் அதிகமாகி வருவதும் மனிதனின் பழகும் தரத்தைக்கூட மோசமாக்கி வருகின்றன.

எங்கு போனாலும் நமக்கு முன் ஒரு கூட்டம் இருப்பதால் இந்தக் கூட்டத்தை நாம் எப்படி முந்திக் கொண்டு கோகலாம் என்கிற உணர்வு பலருக்கும் வந்து விட்டது.

ஒரு திரையரங்கு மேலாளரையோ ஒரு பாடசாலை அதிபரையோ ஒரு சுங்க அதி காரியையோ ஒருவர் தற்செயலாக அறி முகம் செய்து கொள்ள நேர்ந்தால் அவர் மீது போய்ப் போய் விழுந்து இவரை நாம் எப்படி யாவது நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண் டும் என்கிற நினைப்பே அவரை ஆக்கிர மிக்கிறது.

ஒரு வங்கி ஊழியர் என்றாலும் சரி தலை மைச் செயலகப் பியூன் என்றாலும் சரி இவர் கள் என்றைக்காவது நமக்கும் பயன்படு வார்கள் என்கிற கோணத்தில்தான் செயற் கையான அன்பையும் போலியான நட்பு ணர்வையும் மற்றவர்கள் செலுத்த ஆரம் பிக்கிறார்கள். அவரோட ஏன் பழகுறீங்க? இவரை ஏன் வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந் தீங்க? நாம் ஏன் அவர் வீட்டுக்குப் போக ணும்? என்றெல்லாம் ஒரு குடும்ப உறுப் பினர் கேட்டால் அதற்கு எல்லாம் பின்னால் நமக்கு உதவியா இருப்பாரு என்று வெளிப் படையாகவே பேசுகிறார்கள்.

மேற்கூறிய வகையில் அடங்கும் பெரிய மனிதர்களை மட்டுமல்ல, தமக்கு அறிமுக மாகும் அத்தனை பேரையும் எந்த விதத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கணக்கு போடும் மனிதர்கள் பெருத்துப் போய்விட்ட காலம் இது.

நட்பை நட்புக்காகவும் அன்பை நல்லு றவுக்காகவும் இல்லாமல் தங்கள் காரியங் களை முடித்துக் கொள்ளும் துருப்புச் சீட்டு களாக மட்டும் பயன்படுத்திக்கொள்ளும் மனிதர்களை நாம் இனம் பிரித்து உணர வேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் ஏரா ளமான விண்ணப்பங்களையும் சிபாரிசுக ளையும் கோரிக்கைகளையும் நீட்டியபடி இருந்து நம்மை ஒரு வழி ஆக்கிவிடுவார் கள்.

ஏதோ நான் யாருக்கும் உதவக் கூடாது என்கிற பாணியில் உபதேசிப்பதாக தவ றாகப் பொருள் கொண்டு விடவேண்டாம்.

மனிதப் பண்புகளை மதிக்காமல் சுயநலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்கிறவர் களிடம் எச்சரிக்கை தேவை என்றே குறிப்பிட வருகிறேன்.

நம் குடையில் கூடுதலாக ஒருவர் வர லாம். ஆனால் குடையைப் பறித்துக் கொண்டு நம்மை நனையவோ காயவோ விடுபவர்களிடம் கவனம் தேவை.

அப்படி இவர்களிடம் நாம் கவனமாக இராவிட்டால் சிந்துபாத் லைலாவைச் சுமந்த கதையாய் காலம் பூராகவும் இவர்களை இழுத்துக்கொண்டு திரிய வேண்டிவரும்.

லேனா தமிழ்வாணன்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2006 வினாத்தாள் பகுதி-1

33. 1 ஆம் 2 ஆம் தராசுகளில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகளின் மொத்தத்தை அவதானிக்க. மூன்றாம் தராசில் உள்ள பொருட்களின் நிறை எத்தனை கிராம்?



கிலோகிராம் 6 | கிலோகிராம் 8 | கிலோகிராம் .....

34. பின்வரும் பொருட்களின் விலைகளின் கூட்டுத்தொகையைப் பார்த்து புத்தகத்தின் விலையைக் காண்க.



புத்தகத்தின் விலை .....

35. இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள இலக்கம் யாது?

3	8	5	3	8	2	6	5
4	3	4	2	9	6	3	2

.....

36. இங்கு அதிக தடவைகள் உள்ள வடிவம் யாது?



37. ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.



எழுத்து W இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது? .....

38. ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.



இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது? .....

14.06.2017, 16.06.2017 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 வினாக்களின் விடைகள்

1) 2	6) 1	11) 3	16) 2	21) 2	26) 3	31) 4
2) 3	7) 1	12) 2	17) 1	22) 3	27) 1	32) 2109
3) 2	8) 2	13) 3	18) 3	23) 3	28) 2	33) 2008
4) 1	9) 2	14) 1	19) 2	24) 3	29) 3	34) மு.ப. 11.10
5) 2	10) 3	15) 3	20) 1	25) 2	30) 3	35) பி.ப. 11.00

36) AFK - வெட்டும் உபகரணங்கள்
37) BDI - விளையாட்டு உபகரணங்கள்
38) ECJ - வீட்டு உபகரணங்கள்
39) மரப்பலகைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.
40) நண்பர்கள் தேநீர் விருந்தில் கலந்துகொண்டனர்.

♦ நிமல், விமல், அமல் என்னும் மூவர் உடற்பயிற்சிக்காக நடந்து செல்லும் மூன்று பாதைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்கள் மூவரும் பயணத்தை ஆரம்பிக்கும் இடங்கள் A, B, C ஆகிய எழுத்துக்களாலும், முடிவிடங்கள் X, Y, Z ஆகிய எழுத்துக்களாலும் குறிக்கப்படுகின்றன.



39. இம் மூவரிடையே எவர் மிக நீளமான பாதையில் பயணம் செய்கிறார்? .....
40. இம் மூவரும் தத்தம் பயணப் பாதைகளில் நடந்து செல்லும்போது அதிக தடவைகள் தமது இடப்பக்கமாகத் திரும்பியவர் யார்? .....

31.05.2017 , 02.06.2017 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட பகுதி - 2 வினாக்களின் விடைகள்

01) 1.கொழுகொம்பை
2.அங்குமிங்கும்
3.தேர்
4.நிறுத்தினான்
5.வாட்டம்
6. யான்

02) அண்டித் தீண்ட ஒண்ணாதார்

03) 1. ஐயோ ! என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா ?
2. " என் நண்பனிடம் ஆந்தைகளுக்கு இரவில் கண் தெரியுமா " என்று கேட்டார்?

04) 1. அறிந்து 2. மலை 3. பரந்து

05) (1) 1. பச்சை + கிளி 2. காவி + உடை
(2) 1. மரவேர் 2. மட்குடம்

06) 1. பதினெட்டு 2. வசிட்ட 3. மிளான்
4. வளர்ந்தன 5.வந்தாள்

07) 1. நாங்கள் ஒரு படத்தை வரைவோம்.
2. நான் எனது நாட்டை நேசிக்கின்றேன்
3. இது மேசைக்கு அருகில் உள்ளதா?

08) 1. Rabbit 2.Pine apple

11. பொருத்தமான வாக்கியங்கள்

12) 1. 2 2. 1 3. 4 5. 1 6. 2 7. 4 8. 4 9. 3 10. 1 11. 1 12. 4 13. 2 14. 4 15. 12 16. 3 17. 3 18. 4 19. 3 20. 2 21. 1 22. 3 23. 2 24. 3 25. 1

13) 01. அ) முப்பத்து ஒன்பதாயிரத்து தொண்ணூறு
ஆ) 68350
02. அ) xix ஆ) XIII
03. 675 ml
04. 15
05. அ) 44 cm ஆ) 6
06. 12, 18, 24, 30
07. 8
08. 81, 243
09. 8798
10. 100
11. 60
12. 10 வயது
13. 12.40
14. 26 kg 250 g
15. ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2006 வினாத்தாள் பகுதி-2

1. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்க.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது...

கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமம் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும் - வித்துவான் க. வேந்தனார்

பாடல் அடிகளைக்கொண்டு i) தொடக்கம் x) வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

i) 'அறம்' என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்றை எழுதுக. .....
ii) தொண்டுகளில் பெரியது எனக் கவிஞர் கருதுவது எதனை? .....
iii) 'உள்ளம் கசிதல்' என்பதன் பொருள் யாது? .....
iv) நாம் நினைத்தோம் என்பதை ஒருமையில் மாற்றி எழுதுக. .....
v) தந்தை, தாயைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக. .....
vi) பசுவின் இளமைப் பெயர் யாது? .....
vii) இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை பெண்பாற் பெயர்ச்சொல் யாது? .....
viii) இங்கு இடம்பெறும் முன்னிலை, பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக. .....
ix) கவிஞர் கன்றை யாருக்கு ஒப்பிடுகிறார்? .....
x) பருவம் பார்த்துப் பயிர்செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி ஒன்றை எழுதுக.
.....

2. சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

கதைகள் / பற்றிய / பலவற்றை / குளங்கள் / சேகரித்தான் / மோகன்
.....
கடக்க / மஞ்சள் / பயன்படுத்துவோம் / கோட்டையே / எப்போதும் / பாதையை
.....

3. பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.

i) சூரியனைக் கண்ட பனி போல .....
ii) கல்லில் மேல் எழுதிய எழுத்துப்போல .....

4. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

i) இந்த ஆண்டு எங்கள் பாடசாலையின் ..... விழா எமது அதிபரின் தலைமையில் நடைபெற்றது.
(பறிசழிப்பு. பரிசளிப்பு. பரிசலிப்பு. பரிசழிப்பு)
ii) வாழ்க்கையில் நாம் முன்னேற ..... செய்ய வேண்டும்.
(முயர்ச்சி. முயற்சி. முயற்சி. முயட்சி)
iii) லூயி பாஸ்டர் ..... ஈடுபட்டார்.
(ஆராச்சி. ஆராட்சி. ஆராய்ச்சி. ஆராட்ச்சி)

5. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

We buy ..... from the post Office.
(books, pencil, stamps, bags)
வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

6. கருத்தினைத் தமிழில் எழுதுக.

Good morning : .....
Please come here : .....
What is this ? : .....

7. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின்மீது தமிழில் எழுதுக.



♦ 8 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழக் கோடிடுக.

8. ஆண்டுக்கு ஒருதடவை மட்டும் காய்க்கும் பழம்
1) பப்பாசி 2) மரமுந்திரிகை 3) வாழை 4) கொய்யா

9. காற்றின் உதவியுடன் பரவும் தாவரம்
1) புன்னை 2) இருவேரி 3) சீதேவியார் செங்கழுநீர் 4) திப்பிலி

10. தண்டு கோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம்
1) கத்தரி 2) புடோல் 3) குரக்கன் 4) நெல்

11. உருவில் காட்டப்பட்டுள்ள திருகாணியைப் பொருத்தப் பயன்படுத்தக் கூடிய மிகப்பொருத்தமான கருவி பின்வருவனவற்றில் யாது?



1) 2) 3) 4)

12. அணிந்திருக்கும் உடையில் தீப்படித்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்படவேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை.
1) தடித்த துணியினால் போர்த்துதல்
2) நிலத்தில் உருளச் செய்தல்
3) உடையின் தீப்பிடித்த பகுதியைக் கிழித்தெறிதல்
4) வைத்தியரிடம் கொண்டு செல்லுதல்

13. நீரைக்கொண்டுள்ள கண்ணாடிக் குவளையில் சிறிதளவு தேங்காயெண்ணெயை இட்டுச் சிறிது நேரத்தின் பின்னர் அவதானிக்கக் கூடியது



1) 2) 3)

14. அசுத்த நீரைப் பருகுவதனால் ஏற்படத்தக்க நோய்
1) டெங்குக் காய்ச்சல் 2) மலேரியா 3) யானைக்கால் நோய் 4) வாந்திபேதி

15. விவசாயிகள் 'ஏர்' கொண்டு உழுதனர். இதில் ஏர் என்பது
1) மாடு 2) இயந்திரம் 3) கலப்பை 4) துடுப்பு

16. எதிரி வாலைப் பிடிக்க முயலும்போது தனது வாலைப் பிய்த்துக்கொண்டு செல்வது
1) உடும்பு 2) கபரக்கொய்யா 3) பல்லி 4) ஓணான்

17. பருகுவதற்காகப் பால் பைக்கற்றைத் திறப்பதற்கு முன்பாகப் பைக்கற்றில் குறிக்கப்பட்டுள்ள விபரங்களில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது
1) காலாவதியாகும் தினம் 2) உற்பத்தி செய்த தினம்
3) உள்ளடக்கப்பட்ட பாலின் அளவு 4) பாலில் அடங்கியுள்ளவை

18. பின்வருவனவற்றில் தேசிய அடையாளங்கள் அல்லாதது எது?
1) நீலோற்பலம் 2) நிறை கலசம் 3) நாகமரம் 4) காட்டுக்கோழி

19. கல்லொன்றை இலகுவில் புரட்டுவதற்கு நெம்பு பிடிக்கப்படவேண்டிய மிகச் சரியான முறையைக் காட்டும் படம் எது?

1) 2) 3)

20. மஞ்சள் நிறப்பின்னணியுடன் காணப்படும் இவ் வீதிச் சமிக்ஞையினால் வெளிப்படுத்தப்படுவது யாது?

1) பிள்ளைகள் பாதையைக் கடக்கும் இடம் முன்னால்
2) பாதசாரிகள் பாதையைக் கடக்கும் இடம் முன்னால்
3) விரைவாகப் பாதையைக் கடக்கவும்
4) பாதசாரிகள் பாதையைக் கடக்கும் இடம்

21. சைக்கிளின் பின்புறச் சேறு தடுப்பானில் சிவப்புநிற (டெயில்லைற்) ஒளித்தெறியி பொருத்தப்பட்டிருப்பதன் காரணம்
1) இரவில் நடந்து செல்பவரின் பாதுகாப்பிற்காக
2) இரவில் பாதைக்குக் குறுக்காகச் செல்பவரின் பாதுகாப்பிற்காக
3) இரவில் கடந்து செல்லும் பாதசாரிகளுக்குத் தெரியவேண்டுமாதலால்
4) இரவில் பின்புறம் வரும் வாகனங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதால்

22. ஒரு நூலினால் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள காந்தத் துண்டை உரு 1 காட்டுகிறது. கடதாசியினால் சுற்றப்பட்ட யாதாயினும் ஒன்றைக் காந்தத் துண்டுக்கு அண்மையில் கொண்டு செல்லும்போது காந்தத் துண்டு அமைந்திருக்கும் விதத்தை உரு 2 காட்டுகிறது. கடதாசியினால் சுற்றப்பட்டிருந்தது



உரு 1 உரு 2

1) அலுமினியத் துண்டு 2) இரும்புத் துண்டு
3) காந்தத் துண்டு 4) பித்தளைத் துண்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சைட்டம் தொடர்பான போராட்டங்களுக்கு நீதிமன்றம் தடை!

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு சார்பாக மற்றும் எதிராக நேற்று மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போராட்டங்களுக்கு தடை விதித்து நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாழைத்தோட்டம்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் மூன்று போராட்டங்களை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக, பொலிஸார் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தினர்.

சௌந்தர்ய பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் அனைத்து பல்கலைக்கழக பிக்கு மார் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதனால், பொதுமக்களின் அமைதிக்கு பங்கம் ஏற்படக் கூடும் என, புலனாய்வுப் பிரிவினரால் தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார், எனவே இதற்கு தடை விதிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர். விடயங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதம நீதவான் லால் ரணசிங்க பண்டார, குறித்த போராட்டங்களுக்கு தடையுத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-7)

கடத்தப்பட்ட வர்த்தகர் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

காரில் பயணித்த நபரொருவர் கடத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 25ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை, கடத்தப்பட்டதாக கூறப்படுபவர் வென்னப்புவ - ஹெலன் மாவத்தை பகுதியைச் சேர்ந்த நிஹால் அஜித் பீரிஸ் எனும் வர்த்தகராவார்.

25ஆம் திகதி அதிகாலை குணா என்பவர் தனது கணவரை கடத்தியதோடு, காரை அங்கேயே விட்டுச் சென்றுள்ளதாக, கடத்தப்பட்ட வர்த்தகரின் மனைவியான ஜெசிந்தா குமுதினி பெரேரா நேற்று முன்தினம் 26 ஆம்திகதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குணா தன்னிடம் 50 இலட்சம் ரூபா கோரியதாகவும், மட்டக்களப்பிலுள்ள ஓர் இடத்தில் தன்னை மறைத்து வைத்திருப்பதாகவும் கணவரின் தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்ட வேளை, அவர் தகவலளித்ததாக ஜெசிந்தா தனது முறைப்பாட்டில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கடத்தப்பட்டவர் வர்த்தகர் என்பதால் பணம் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடு இதற்குக் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

தபால் ஊழியர்களின் போராட்டத்தை ஓர் சூழ்ச்சியாகவே நோக்க வேண்டும்

தபால்துறை அமைச்சர் கூறுகிறார்

தபால் ஊழியர்களின் போராட்டத்தை ஓர் சூழ்ச்சியாகவே நோக்க வேண்டுமென தபால்துறை அமைச்சர் எம்.எச்.அப்துல் ஹாலீம் தெரிவித்துள்ளார்.

தபால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் அரசாங்கத்தை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் நோக்கில் இவ்வாறு நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

தபால் திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்கள் விற்பனை செய்யப் படும் என்ற குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

தபால்சேவையை வினைத்திறனாக்கும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடாது பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்ப முயற்சிக்க வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (இ-7)

வைரம் கலந்த 2 கிலோ கிராம் தங்கத்துடன் நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

வைரம் கலந்த 2 கிலோகிராம் தங்கத்துடன் நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, சுங்க பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

இவர் இந்த தங்கத்தை, தாய்லாந்தில் இருந்து சட்ட விரோதமான முறையில், இலங்கைக்கு கொண்டு வந்துள்ளார்.

குறித்த சந்தேகநபர், பாணந்துறை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் இதற்கு முன்னரும் இவ்வாறு சட்ட விரோதமான முறையில் பொருட்களைக் கொண்டு வந்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என, சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (இ-7)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1116

Search for people, places and things — Nagendram Home

வானதி

சியான்

விஜைதரன்



யாஜுஜா

ரவி

பிறேம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook வாசகர்களில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனமும் றகுமா நிறுவனமும் இணைந்து போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கையை நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை, நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் சாரணர், பாடசாலை மாணவர்கள், ஓய்வுநிலை ஊழியர்கள், வடமராட்சி நல்லொழுக்க நிறுவன ஊழியர்கள், பொலிஸார், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலர் இணைந்து மேற்கொண்டனர். இதன்போது விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

சித்த மருத்துவமும் போகர் சித்தரின் இரசாயனத்துறையும்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மருத்துவம், விஞ்ஞானம், மெஞ்ஞானம், இரசவாதம், காயகற்பமுறை, யோகப்பிரயோகம் என்று சகலதிலும் உச்சம் தொட்ட ஒரு சித்தர் உண்டு என்றால் அவர் போகர்தான். பொதுவில் சித்தர்கள் எனப்படுபவர்கள் இந்த உலகம் பின்பற்றும் ஆன்மீக நெறிகளை புறந்தள்ளியவர்கள். ஆலயம் செல்லுதல், விக்கிரகங்களை பூஜித்தல் , ஆசார கடமைகளை செய்தலை விடுத்து தங்களுக்குள்ளேயே இறைவனைக்கண்டு இன்புற்றவர்கள். ஆனால் இதில் போகர் பெரிதும் வேறுபட்டவர். பல சித்தர்கள் போல இவரும் ஒரு சிவத்தொண்டர். அதேவேளை அன்னை உமையை தியானித்து அவள் அருள் பெற்றவர். உலகம் உய்ய வேண்டும் என்பதற்காகத் தான் தரிசித்த தண்டாயுதபாணிக்கு நவபாஷாணத்தால் சிலை எடுத்தவர். பாஷாணங்களைக் கட்டுவது என்பது எளிதல்ல. ஒவ்வொரு பாஷாணமும் ஒவ்வொருகுணம் அவைகளை உரிய முறையில் சேர்த்து பிசைந்தால் தான் உறுதியான ஒரு பொதுவான பாஷாணம் உருவாகும்.

இதை நயனங்களால் (கண்களால்) பார்த்தாலே கூட போதும். அதிலிருந்து வெளிப்படும் நுட்பமான கதிர்வீச்சு கண் வழியாக உடம்பின் உள்ளும் புறமும் பழந்து நலம் ஏற்படும். இதன் மேல் பட்டு வழியும் பொருள் எதுவாயினும் அதுவும் மருத்துவ குணம் கொண்டு தீராத வியாதிகளை எல்லாம் தீர்த்து வைக்க முடியும்.

உயர்வான பாஷாணங்கள் 9 தேர்வு செய்து அதைக்கொண்டு போகர் செய்ததுதான் பழனி முருகனின் மூலத்திருவுருவம். அவ்வாறு செய்தது அல்லாமல் அவ்வுருவிற்கு ஏற்ற வழிபாட்டு முறையை ஒரு புதிய சித்தாந்தமாக உருவாக்கி அதையும் நடைமுறைப்படுத்தியவர் போகர். மருத்துவ முறைகட்கு சித்தர்கள் தேர்வு செய்தது தாவர, தாது, ஜீவப்பொருட்கள். மூலிகை மருந்துப் பொருட்கள் விசாலமானது. ஆயினும் வன்மையுடையது தாது மருத்துவமே. தாது முறை மருத்துவத்திற்கு போகர் தேர்வு, செய்தது மலை , பூமி , கடல் இவற்றிலிருந்து உருவாகும் பல வகை இரசாயனங்களே. இத்தாதுக்களைக் கொண்டு உடலின் இயக்கத்திற்கேற்ப அவற்றின் ஆதார சக்திகள் அழிந்து போகாமலும், உடலின் வினை மாற்றம் புரியத் தக்க வகையிலும் மிக மிக நுண்ணிய இரசாயனமாக மாற்றமடையச் செய்வதே சித்த மருத்துவத்தின் தன் நிகரில்லா இரசாயனமாகும். புதினெண் சித்தர் வரிசை தோன்றுவதற்கு முன்பு நவசித்தர்களே பிரதானமாகக் கருதப்பட்டனர். மேரு மலை தர் இவர்களின் யோகாஸ்தலம், மேருவும். இமயமும் உலகப்பற்றில்லாத சித்த புருசர்கள் பெரும்பாலும் சஞ்சாரம் செய்யும் ஒரு வெளியாகவே விளங்கியது.

இங்கு நவநாத சித்தர்கள் வசித்து வந்தனர். அவர்களுள் ஒருவர் காலங்கிநாதர் , காலங்கி நாதர் போகர் வந்த சமயம் மகா சமாதியில் இருந்தார்.

போகர் சமாதியில் உள்ள காலங்கி நாதரை வணங்கி, அவ்விரு மலைகளிலும் பல தாதுவகைகளை தேடிக்கண்டு பிடித்தார். அதைக் கொண்டு பல காயகற்பங்களை செய்து தானே உண்டு பார்த்து அதன் பயனையும் உடனே அடைந்தார். இதனால் அவரது தேகம் மிகவும் திடமாகியது. மேலும் வானவெளியில் பறப்பது, நீர்மேல் நடப்பது போன்ற செயற்பாடுகள் எல்லாம் மிக மிகச் சாதாரணமாகியது. இதனால் போகருக்குள் கர்வம் துளிர்த்துவிட்டது.

துரோணருக்கு ஒரு ஏகலைவன் போலதானும் குருவை வணாங்கி அந்த அருளாலேயே பல தாதுக்களை கண்டறிந்து விட்ட ஒருவன், உண்மையில் காலங்கி நாதருக்கு சீடர்கள் இருந்திருந்தால் அவர்கள் கூட இப்படி எல்லாம் அறிந்திருக்கமாட்டார்கள் என்றெல்லாம் நினைக்கத் தொடாங்கி விட்டார்.

இதனால் அந்த மலைத் தளத்தில் பணிவாக பார்த்து [illegible] ம்பித்தார். மேருவிலும், இமயத்திலும் சூட்சும வடிவில் பலநூறு சித்த புருசர்கள் தவமியற்றி வந்தனர். அவர்களில் பலரது தவம் போகரின் கர்வமான நடையால் கலைந்தது. அவர்கள் கண் விழித்ததோடு போகருக்கும் காட்சியளித்தனர்.

திடுக்கிட்ட போகரிடம் நாங்கள் காலங்கிநாதரின் மாணவர்கள், பலப்பல யுகங்களாக எங்களை மறந்து தவம் செய்தபடி இருக்கிறோம் என்கிறார்கள். அத்தனை யுகங்களும் சில நாட்கள் கடந்தது போலத் தான் இருக்கிறது என்று அவர்கள் கூற போகருக்கு அது ஆச்சர்ய அதிர்ச்சிக் குள்ளாக்கியது. அப்படியானால் அவர்கள் தவத்தை எவ்வளவு பெரிய விசயமாக கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. அந்த நொடி, தான் கற்ற தாது வித்தை எல்லாம் மிக [illegible] என்கிற எண் [illegible] அவரது கர்வமும் அடங்கியது. அதை அறிந்த அந்த சித்த புருசர்கள் போகருக்கு பல சித்த ரகசியங்களை போதித்தனர்.

ஒருசித்தர் ,போகர் மீது பெரும் கனிவு கொண்டு "அமிர்த மணிப்பழம்" என்னும் தேவக்கனிமரம் ஒன்றை அந்தவெளியில் காட்டி அதன் பழங்களை உண்ணச் சொன்னார். அதை உண்டால் ஆயுள் முழுக்கப் பசிக்காது, நரைக்காது, முதுமை உண்டாகாது. இதில் உள்ள பழத்தை உண்டு விட்டே இங்குள்ளோர்காலத்தை வென்று தவம் செய்கின்றனர் என்று கூறிட,போகர் அந்த கனிகளை உண்டு உடம்பின் பிணியாகிய "பசி,தாபம், மூப்பு என்ற மூன்றிலிருந்தும் விடுதலை பெற்றார்.

இப்படி இப்படியாக முன்னேறிய போகருக்குள் சில விசித்திரமான எண்ணாங்களும் ஏற்பட்டன. அவை முழுக்க மனித சமுதாயம் தொடர்பானவையே.

ஒரு உயிர் எதனால் மனிதப் பிறப்பெடுக்கிறது? அப்படி பிறக்கும் பொழுது எதனடிப்படையில் ஏழையின் வயிற்றிலும் பணக்காரர் வயிற்றிலும் பிறக்கின்றது? இறப்பிற்குப்பின் கொண்டு செல்வது எதுவும் இல்லை என்று தெரிந்தும் மனிதன் ஆசையின் பிடியிலே சிக்கி கிடக்கின்றான். எவ்வளவு முயன்றும் அவனால் மரணத்தை ஏன் வெற்றிகொள்ள முடியவில்லை? இப்படி பல கேள்விகள் போகரை ஆட்டிபடைத்தன, மொத்தத்தில் மனித சமூகம் வாழத் தெரியாமல் வாழ்ந்து விதியின் கைப்பாவையாக இழுத்துச் செல்லப் படுவது போல உணர்ந்தவர். மனித சமூகத்தை காப்பாற்றியே தீர வேண்டும் என்று எண்ணம்கொண்டார்.

இதனால் தானறிந்த மருத்துவ மூலிகை ரகசியங்களை நூலாக எழுதினார். அவைதான்.

01. போகர் 7000

02. போகர் நிகண்டு

03.போகர் 17000 சூத்திரம்.

04.போகர்700 யோகம்

இவர் உள்ளத்தில் மனித சமூகத்தை நோயின்றி வாழவைக்கும் அரிய குறிப்புக்கள் தோன்றின அதேசமயம் இவர்களுக்கு எதிர்ப்பும் தோன்றியது. பலசித்தபுருசர்கள் இவரை பெரிதும் எதிர்த்தனர். சித்த ரகசியங்களை எழுதி வைப்பது ஆபத்து என்றனர். மனிதன் அனுபவிக்க வேண்டிய கர்மங்களை முற்றாகநீக்க முயற்சிப்பது இயற்கைக்கே ஊறு விளைவிக்கும் என்றெல்லாம் புகார்கள் கூறினர். போகர் அவற்றையெல்லாம் காதிலேயே வாங்கிக் கொள்ளவிலலை.

சஞ்சீவி மூலிகை ஒருவர் கையிலும் அகப்படாதபடி விலகியோடும் இயல்புடையது. இதை அறிந்த போகர் அதை ஒருமந்திரத்தால் கட்டிபின்புஅதைக் கைப்பற்றிக் காட்டினார். அந்த மந்திரம் தம்பணா எனப்படுகிறது. இன்றும் காடுகளில் மூலிகைகளை தேடிச்செல்வோர் தம்பணா மந்திரத்தை மானசீகமாக உச்சரித்து காணப்பட பெறாத மூலகைகளையும் கண்டு அதைக் கைப்பற்றுவர்.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார பேராசையில் புதிய அரசியலமைப்பை சீரழித்து வருகிறது கூட்டு எதிரணி கும்பல்

(கொழும்பு)

பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர சிங்கள வர்களும் தமிழர்களும் இணங்கியுள்ளனர். இவ்வாறான பின்னணியில் முன்னெடுக்கப்படும் அரசிய லமைப்பு மறுசீரமைப்பு செயற்பாடுகளை அதிகாரத்துக்கு வரவேண்டு மென்ற பேராசையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் சீரழித்து வருவதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றஞ்சாட்டினார்.

புதிய அரசியலமைப்புக் கான தேசிய அமைப்பு ஹொரண பிரதேசத்தில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன இக்குற்றச் சாட்டை முன்வைத்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை யிருந்தாலே யுத்தம் ஏற்படா மல் தடுக்க முடியும் என முன்னெடுக்கப்படும் பிர சாரம் போலியானது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையாலேயே நாட்டில் யுத் தம் ஏற்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் இருக்கும் பிரச் சினை போதாது என்று அரசி யலமைப்பு தொடர்பில் கதைப்பதாகக் கூறி மக்கள் மத்தியில் மேலும் பிரச்சி னைகளை வளர்த்து விடு கின்றனர்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றுவது. தேர்தல் முறையை மாற்று வது. தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உள்ளிட்ட விடயங்கள் அரசியலமைப் புத் தயாரிப்பில் கூடுதல் கவ னம் செலுத்தப்பட்டுள்ளன.

இன, மத,குல பிரச் சினைகளை உருவாக்கும் சிலரும் இருக்கின்றனர். மனிதநேயம் கடைப்பிடிக் கப்பட வேண்டியுள்ளது. சில வெளிநாடுகளில் இன, மத, குலம் பற்றிப் பார்ப்பதில்லை.

நாம் ஏகாதிபத்திய முறை யையும் விரும்பவில்லை. ஜனநாயகத்துக்கும், சுதந் திரத்துக்குமே நாம் ஆதர வளிக்கின்றோம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஏகாதிபத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனாதிபதி முறைக்கு நான் அன்றே எதிர்ப்புத் தெரிவித் திருந்தேன்.

முன்னாள் ஜனாதிபதி இந்த அரசியலமைப்பை மாற்றுவதற்கு முயற்சித்து, தனக்கான அதிகாரங்களை கூட்டிக் கொண்டார். அதன் பின்னர் அதிகாரங்கள் கூட்டு வதற்கு முன்னின்று செயற் பட்டது பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் என்றனர்.

எனினும், ஐக்கிய தேசி யக் கட்சி நிறைவேற்று ஜனா திபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மா னத்தை எடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்ற சரத்து மாற் றப்பட்டு, ஜனாதிபதியை விமர்சிக்கக் கூடியவாறான சட்டம் கொண்டு வரப்பட் டுள்ளது.

அமைச்சர் ராஜித பரபரப்பு குற்றச்சாட்டு

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் இது உள்ளடக்கப் பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதனக்கான அதிகாரங் களைக் குறைத்துள்ளார்.

தேர்தல் முறை மாற் றப்படாவிட்டால், தேர்தலுக் காக பெருமளவு பணம் செலவிடவேண்டி ஏற்படும். சமூகத்தில் பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்துக்குக் கிடைக் காமல், முதலாளிமாரே பாரா ளுமன்றத்துக்கு வருவார்கள்.

இன, மத அடிப்படை யான போராட்டங்களால் நாடு பின்னோக்கிச் சென் றுள்ளது. மனிதநேயம் இல் லாமல் போயுள்ளது என் பதை எவரும்உணரவில்லை. ஏனைய மதங்களை குறைத்து மதிப்பிட வேண்டாம்.

எதிர்கால குழந்தை களின் மனங்களிலும் இன, மத, குல பேதங்களை உரு வாக்க வேண்டாம். அதிகாரத் தைப் பெற்றுக் கொள்வதற் காக சிங்கள அரசியல் வாதி கள் சிங்கள இனவாதத்தை பரப்பினார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் இனவாதத்தைப் பரப் பினார்கள். அதன் பின்னர் முஸ்லிம் இனவாதம் உருவானது.

சமஷ்டி முறை தொடர் பில் முதன் முதலில் கருத்துக் கூறியது பண்டார நாயக்க வாகும். யுத்தமொன்று ஏற் பட்டால் அதற்கு முகங் கொடுக்க நிறைவேற்று ஜனாதிபதி முறை அவசியம் என அரசியல்வாதிகள் சிலர் கூறி வருகின்றனர்.

இது என்ன மோசமான வார்த்தையாகும். இது பொய் யானது. யுத்தம் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்தது நிறைவேற்று ஜனாதிபதி முறையாகும்.

இதுபோன்ற கோழைத் தனமான அரசியல் கருத்துக் களுக்கு ஏமாற வேண்டாம். யோசித்து முடிவெடுங்கள். தேசிய பிரச்சினையை அடுத்த சந்ததிக்கும் விட்டு வைக்க வேண்டாம்.

அரசியலமைப்பை மறு சீரமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்றை இந்த அரசாங்கம் உருவாக் கியுள்ளது. எனினும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி யினர் இதனை சீரழிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அதிகாரத்துக்கு வர அவர்கள் கொண்டுள்ள பேராசையே இதற்கு காரண மாகும். வடக்கில் அபிவி ருத்தி மேற்கொள்ளும்போது அபிவிருத்தி செய்ய வேண் டாம் எனக் கூறவேண்டாம்.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயா ராக உள்ளது. அதிகாரப் பகிர்வுக்கு சிங்கள மக்களும் விருப்பமாக இருக்கின்றனர்.

இதுவரலாற்றில்ஏற்பட்டுள்ள பொன்னான காலமாகும். இதனை தோற்கடிப்பதற்கு சிலர் இன, மத, மொழி வேறு பாட்டைப் பயன்படுத்த முயல் கின்றார்கள்என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

இரவோடிரவாக தோட்டவாடியும் மரங்களும் தீ வைத்து அழிப்பு



ஏறாவூர், பொலிஸ் பிரி விற்குட்பட்ட மீராகேணிக் கிராமத்திலுள்ள தோட்ட வாடியும் அந்தத் தோட் டத்தில் நடப்பட்டிருந்த பயன் தரும் மரங்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள் ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ள இச் சம்பவத்தில் எம். முஹம்மத் ஹனீபா என்பவரின் தோட்டமும் தோட்டவாடியும் அங் கிருந்த மரங்களுமே எரித்து சேதமாக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸில் முறை யிடப்பட்டுள்ளது. (இ-3)

வெலிசர பகுதியில் அனர்த்த நிலையம்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தின் போது உதவும் வகையில் இலங்கை கடற்படையினால் வெலிசர கெமுனு கடற்படை தளப்பகுதியில் முதலாவது அனர்த்த நிலையப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகு ணரத்ன பிரதம விருந்தி னராக கலந்து சிறப்பித்தார்.

குறித்த பிரிவில் நட மாடும் சமையலறை, சமை யல் உபகரணங்கள், கூடா ரங்கள், நீர் பம்பிகள், கழி வறைகள் உள்ளிட்ட பல பொருட்கள் காணப்படுகின் றன.

குறித்த நிலையம் மேற்கு மற்றும் தென் மாகாணங்க ளில் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தத்தின் போது உத வும் வகையில் அமைக்கப்பட் டுள்ளது. இந்த நிகழ்வில் சிரேஷ்ட கடற்படை அதி காரி கள் மற்றும் பல கடற்படை வீரர்களும் கலந்து கொண்ட னர். (இ-7)

பியசேனவின் இடையீட்டு மனுவை பரிசீலனைக்கு எடுப்பது ஒத்திவைப்பு

(கொழும்பு)

கீதா எம்.பி. விவகாரம் தொடர்பிலான வழக்குத் தீர்ப்பை எதிர்த்து, அவரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டு மனுவுக்கு, பியசேன கமகேயினால் தாக் கல் செய்யப்பட்டிருந்த இடை யீட்டு மனுவை, பரிசீல னைக்கு எடுத்துக்கொள்வது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த இடையீட்டு மனுவை, எதிர்வரும் 7ஆம் திகதியன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித் துள்ளது. கீதா குமாரசிங்க சார்பில், ஜனாதிபதி சட்டத் தரணி ரொமேஸ் டி சில்வா வும், பியசேன கமகேவின் சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும் நீதிமன் றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதம நீதியரசர் பிரிய சாத் டெப், ஈவா வனசுந்தர மற்றும் உபாலி அபேரத்ன ஆகிய மூன்று நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று மனு, விசாரணை க்கு வந்த போதே, அம் மனுவை பரிசீலனைக்கு உட்படுத்துவது ஒத்தி வைக் கப்பட்டது.

கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரி மையை இல்லாமல் செய்து மேன்முறையீட்டு நீதிமன் றத்தினால் வழக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக, கீதாவி னால் தாக்கல் செய்யப்பட் டுள்ள மேன்முறையீட்டு மனுவுக்கே, பியசேன கமகே இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கீதாவின் மேன்முறை யீட்டு மனுவில், பிரதிவாதி யாக தன்னையும் குறிப் பிடாமையால், தனக்கும் இடையீடு செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு, காலி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன கமகே, இடையீட்டு மனுவைத்தாக்கல் செய் திருந்தார்.

கீதா குமாரசிங்க, நாடா ளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்று, மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த மே மாதம் 3ஆம் திகதியன்று தீர்ப்பளித் திருந்தது.

அந்தத் தீர்ப்பின் பிர காரம், வெற்றிடமாகும் எம்.பி. பதவிக்கு விருப்பு வாக்குப்பட்டியலில் அடுத்த தாக இருக்கின்ற தன்னையே நியமிக்கவேண்டும். அதுவே சட்டத்தின் அடிப்படையில் இருக்கின்ற உரிமையாகும். அந்த விவகாரத்தை சட்டத் தரணியின் ஊடாக தெளிவு படுத்த வேண்டுமென பிய சேன கமகே, உயர் நீதி மன்றத்தில் கோரியிருந்தார்.

கீதா குமாரசிங்கவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனுவில், பிரதிவாதியாக தன்னுடைய பெயர் குறிப்பிடப்பட்டவில்லை. அது, உயர் நீதிமன்றத்தின் சட்ட ஒழுங்கு விதிகளை மீறுகின்ற செயற்பாடாகும். ஆகையால், அவரின் மேன் முறையீட்டு மனுவை நிராக ரிக்க வேண்டுமென, இடை யீட்டு மனுவில் குறிப்பிடப்பட் டுள்ளது.

கீதா குமாரசிங்கவின், மேன்முறையீட்டு மனு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, விசாரணை கள் நிறைவடையும் வரை யிலும் அவருக்காக எந்த வோர் உறுப்பினரையும் நியமிப்பதற்கு தடைவிதித்து, உயர்நீதிமன்றம் மே மாதம் 5ஆம் திகதியன்று விதித் திருந்த கட்டளையை இரத் துச் செய்யுமாறும், பியசேன கமகே தன்னுடைய இடையீட்டு மனுவில் குறிப் பிட்டிருந்தார்.

கீதா குமாரசிங்க இலங்கை மற்றும் சுவிட் சர்லாந்து ஆகிய இரண்டு நாடுகளிலும் இரட்டை பிர ஜாவுரிமை பெற்றிருந்தமை யால், நாடாளுமன்ற உறுப்பி னராக இருப்பதற்கு அவரு க்கு தகுதியில்லை யென மேன்முறையீட்டு நீதிமன் றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேலிச்சித்திரம்

முறையாகக் கையாண்டால் கழிவுகளும் பொருளீட்டக் கூடிய சொத்துக்கள்தான்

அமைச்சர் சம்பிக்க அட்வைஸ்

(கொழும்பு)

கழிவு முகாமைத்துவத்தை முறையாக கையாண்டால் கழிவுகளும் பொருளீட்டக் கூடிய சொத்துக்கள் என்று பாரிய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் சம்பிக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முறையான கழிவு முகாமைத்துவம் நாட்டுக்கு தேவை என்பதை சுட்டிக் காட்டிய அமைச்சர் இது சுற்றாடல் நேயமானதாகவும் பொருளாதார ரீதியில் இலாபம் தருவதாகவும் இருக்க வேண்டும் என அமைச்சர் கூறினார்.

புத்தளம் அருவாக்கல் பிரதேசத்தில் கழிவு முகாமைத்துவ வசதியை ஏற்படுத்தும் பூர்வாங்க முயற்சி மேற் கொள்ளப்படுகிறது. சீமெந்து உற்பத்திக்காக சரளைக் கற்கள் தோண்டப்பட்ட பகுதி பயன்படுத்தப்படும். இதனை தேசிய வள நிலையமாக அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் பாரிய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

ஜனாதிபதியின் அறிக்கையை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நிராகரிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிக்கையை நிராகரித்துள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் போராட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதாக தெரிவித்துள்ளது.

எந்தவொரு வகையிலும் மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் புதிய செயலாளர்

ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை தேசிய மயப்படுத்துவதனைத் தவிர வேறு வழிகள் கிடையாது என அவர் தெரிவித்தார்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை இரத்து செய்வதற்கு பதிலாக அதனை சட்ட ரீதியானதாக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

ஜனாதிபதிக்கு நிதி நெருக்கடி

ஜனாதிபதி நிதியத்தின் நிதி கையிருப்பு வெகுவாக குறைந்துள்ளமையால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதுவரையிலும் ஜனாதிபதி நிதியத்தில் குறிப்பிடத்தக்க அளவு நிதி குறைவடைந்துள்ளது.

இதனால் ஜனாதிபதி நிதியில் மேற்கொள்ளப்படும் நிவாரண நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படவுள்ளது.

ஜனாதிபதி நிதி மூலம் குறைந்த வருமானத்தில் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி நிதியத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ள நிலையில் அதற்காக மூன்று திட்டங்களை முன்வைத்துள்ளார்.

தொலைபேசிகள் மற்றும் தொடர்பாடல் வரி மற்றும் ஜனாதிபதி நிதியத்திற்கு நிதி வழங்கும் அபிவிருத்தி லொத்தர் சபைகளின் வரியை விடுவித்து வருமானத்தை அதிகரித்தல் மற்றும் திறை சேரியின் நிதி பெற்றுக் கொள்வதே திட்டங்களாகும் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

போதைப்பொருளுடன் பிரிட்டன் பிரஜை கைது

மாத்தறையில் ஹஷீஸ் என்ற போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிகம, கப்பரதொட்ட பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை போதைப் பொருள் தடுப்புப் பிரிவிற்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 25 வயதுடைய பிரித்தானியா நாட்டு இளைஞர் என தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இந்நிலையில் மாத்தறை போதைப்பொருள் தடுப்பு பிரிவு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (இ-7)

பெக்கோ இயந்திரத்துக்குள் சிக்குண்டு பெண் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகல்கடப் பகுதியில் பெண்ணொருவர் பெக்கோ இயந்திரத்துக்குள் சிக்குண்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மரணமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வாகல்கட டி-1 பகுதியைச் சேர்ந்த ஜீவனிகுமாரி சந்ரதாஷ (வயது-37) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

மேற்படி பகுதியில் சீன நிறுவனமொன்றால் யான் ஓயா குளக்கட்டு நிர்மாணப் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

இங்கு கடமையாற்றி வந்த இப்பெண், பெக்கோ இயந்திரத்தால் போடப்பட்டுக் கொண்டிருந்த மண்ணிலிருந்து மரத்தின் வேர்களை அகற்றிக்கொண்டிருந்த வேளையிலேயே பெக்கோ இயந்திரத்துக்குள் சிக்குண்டுள்ளார்.

இதில் காயமடைந்த இப் பெண், உடனடியாக டி-4 பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இந்தச்சம்பவத்தை அடுத்து, பெக்கோ இயந்திரச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர். (இ-7)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	கொழுமம்	சாவகச்சேரி	கிளிநொச்சி	மருதனார்மடம்	சுன்னாகம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	140	100	160	140	120	160
உருளைக்கிழங்கு	110	80	100	100	100	110
பச்சைமிளகாய்	400	300	400	400	350	300
தக்காளி	140	140	160	160	100	160
மரவள்ளிக்கிழங்கு	80	60	80	80	70	70
கோவா	160	150	200	160	120	170
கரட்	250	250	200	320	300	300
பூசணி	120	80	100	100	80	100
புடோல்	100	50	80	80	120	80
வாழைக்காய்	100	50	80	80	70	60
சின்னவெங்காயம்	350	300	320	400	250	300
பெரியவெங்காயம்	90	90	100	100	100	120
பாகற்காய்	150	140	200	160	100	280
வெண்டிக்காய்	100	80	100	160	100	120
கருணைக் கிழங்கு	140	50	130	160	120	100
பயற்றங்காய்	150	80	120	160	100	160
லீக்ஸ்	140	80	120	160	120	160
பீற்றூட்	100	100	140	120	140	100
கறிமிளகாய்	300	150	320	280	200	320
முருங்கைக்காய்	200	180	250	200	250	280
போஞ்சி	200	180	200	200	200	180
கத்தரிதம்புள்ள	120	100	160	120	100	100
கீரை - 1 பிடி	30	20	30	30	40	30
தேசிக்காய்	80	80	80	120	100	100
தேங்காய் (ஒன்று)	70	60	55	40-60	70	70
இராசவள்ளி	250	200	--	300	200	300
வெங்காயப்பூ	200	200	250	200	200	240
முள்ளாங்கி	60	50	80	120	80	80
பொன்னாங்கண்ணி	30	10	40	40	25	30
வல்லாரை	10	10	20	20	20	10
ஈரப்பலா	--	--	--	120	100	100

வேகக் கட்டுப்பாட்டையிழந்து உணவு விடுதிக்குள் புகுந்த வான்

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மஞ்சந்தொடுவாயில், வேகக் கட்டுப்பாட்டையிழந்த வானொன்று உணவு விடுதிக்குள் புகுந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம் பெற்ற இவ் விபத்தில் உணவு விடுதியும் வானும் பலத்த சேதமடைந்துள்ள அதே வேளை, அதிர்ஷ்டவசமாக எவருக்கும் உயிராபத்துக்களோ? காயங்களோ? ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஞ்சந்தொடுவாய் முதியோர் இல்ல வீதியில் சென்று கொண்டிருந்த வானே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது. வான் விடுதிக்குள் நுழைந்தபோது அங்கிருந்த ஊழியர்கள் ஓடித் தப்பித்துக் கொண்டதாலேயே உயிராபத்து தடுக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கக் கூட்டத்துக்கு ஆடுகள் தலைமை வகிக்க முடியாது

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் கெடுதி செய்யக் கூடாது

அன்புசால் தமிழ் உறவுகளுக்கு வணக்கம். இப்போது இருக்கக்கூடிய சூழல் மிகவும் மோசமானதாக உள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழரசுக் கட்சி மீதான அத்தனை ஆதரவையும் ஓர் இரவுப் பொழுதோடு அடித்துச் சென்றுவிட்டது.

இது தமிழரசுக் கட்சிக்கு மிகுந்த பாதிப்பு என்பது மறுக்க முடியாத உண்மை. இப்பாதிப்புக்கு தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் பேரவை மீது குற்றம் சாட்டுகிறது.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் அவர்கள் அளவில் அவர்களை ஆற்றுப்படுத்தவும் ஆறுதல்படுத்தவும் உதவுவதாக இருக்கலாமேயன்றி, எமது மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைத்தும் அறிந்தும் தெரிந்தும் வைத்துள்ளனர்.

தமிழரசுக் கட்சி இந்த நாட்டின் பழமையான கட்சி என்பது மறுப்பிற்கில்லை.

ஆனால் அந்தக் கட்சியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் அக்கட்சி சார்ந்தவர்கள் யாரிடமும் இருந்திருக்கவில்லை.

அவ்வாறான எண்ணம் இருந்திருந்தால் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக ஒருபோதும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள்.

சரி நடந்துவிட்டது. அதனைச் சீராக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்த முயற்சிகளுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் உடன்பட்டார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இடத்தில் யார் இருந்திருந்தாலும் புதிய கட்சியை ஆரம்பித்து, தனக்கு இருக்கக்கூடிய மக்கள் ஆதரவை நிரூபித்து தமிழரசுக் கட்சியின் மூல வேரையே பிடுங்கிப் போட்டிருப்பர்.

ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன் மனத்தாலும் தமிழரசுக் கட்சிக்கு கெடுதி நினைக்கவில்லை.

அவர் நினைத்திருந்தால், தனக்கு உடனடியாக இருக்கக்கூடிய 15 உறுப்பினர்களின் ஆதரவோடு ஏனைய உறுப்பினர்களைப் பார்த்து, வாருங்கள் உங்களுக்கு நான் அமைச்சுப் பதவி தருகிறேன். அடுத்த தேர்தலில் ஆசனம் வழங்குவேன் என்று முழங்கியிருந்தால்,

ஒன்று இரண்டு பேரைத் தவிர மற்றெல்லோரும் முதலமைச்சர் பக்கம் வந்திருப்பர். ஆனால் அவர் அதையும் செய்யவில்லை.

மாறாக தமிழரசுக் கட்சியை மதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதலமைச்சர் அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கும் சென்றிருந்தார்.

எனினும் தமிழரசுக் கட்சி தனது சின்னத்தனத்தைக் காட்டிக் கொண்டே இருக்கிறது.

மக்கள் திரண்டு முதலமைச்சருக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்த போது பதறியடித்து சமரசம் பேசிவிட்டு, இப்போது முதலமைச்சர் நம்பிக்கையற்றவராகவே இருக்கிறார் என்று கூறுவதென்றால் இது எந்தவகையில் நியாயமாகும்.

இவ்வாறான கருத்துக்களை இரா.சம்பந்தரும் மாவை சேனாதிராசாவும் ஏற்றுக் கொள்கின்றனரா? அல்லது இதற்கு அனுமதி வழங்குகின்றனரா? நிலைமையை அமைதியாக்கி விட்டு, மீண்டும் முதலமைச்சருக்குத் தொந்தரவு கொடுப்பதைத்தான் நீங்கள் செய்ய நினைத்தால்; அது உங்கள் தலையில் நீங்களே மண்ணைக் கொட்டுவதற்கு ஒப்பாகும்.

ஆகையால் முதலமைச்சரோடு சேர்ந்து செல்லுங்கள். அவரின் முடிவுகளுக்கு இடம் கொடுங்கள். தொடர்ந்தும் உபத்திரவம் கொடுத்தால், முதலமைச்சருக்கு எதிரானவர்கள் என்று கருதப்படுபவர்களை தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

அப்படியா? என்று நீங்கள் அசட்டுக் கேள்வி கேட்டால், அடுத்த தேர்தலில் அப்படித்தான் என்று மக்கள் நிச்சயம் எடுத்துரைப்பர்.

2017/2018 கல்வியாண்டு மாணவர்களுக்கான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப்பாடநெறி ஆரம்பம்

வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாடுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2017/2018 கல்வியாண்டு மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறியில் இணைய விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை மும்மொழிக் கற்கை நிலையத்திலும் மற்றும் கல்வி அமைச்சின் **www. edu min.np.gov.lk** இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 20.07.2017 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ, தபால் மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மும்மொழிக் கற்கை நிலையம், இராமநாமன் வீதி, யா/ கலட்டி மொடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, கலட்டி, யாழ்ப்பாணம் என கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ)

இலங்கைக்கான கடன் தொடர்பாக நாணய நிதியம் ஆராய்கிறது

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள மூன்றாம் தவணைக் கடன் தொகை தொடர்பாக அடுத்த மாதம் தீர்மானிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட 1.5 பில்லியன் டொலர்கள் கடன் தொகையின் மூன்றாம தவணை தொகை அடுத்த மாதம் வழங்கப்படும் எனவும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த கடன்தொகை இலங்கைக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் சில கோரிக்கைகள் இலங்கையால் நிறைவேற்றப்படாத காரணத்தினால் கடன தொகை வழங்கப்படுவது தாமதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்த மாதம் 2 ஆம் வாரத்தில் இடம்பெறவுள்ள நாணய நிதியத்தின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இலங்கைக்கான மூன்றாம் தவணைக் கொடுப்பனவை வழங்குவது தொடரபாக தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன 30ஆவது ஆண்டுநிறைவு தின நிகழ்வை முன்னிட்டு இடம்பெறும் வீதி மற்றும் மைதான விளையாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் 01.07.2017 சனிக்கிழமை காலை 7மணிக்கு இடம்பெறவுள்ளது.

வீதியோட்டப் போட்டிகள் ஜெய்ப்பூர் நிறுவன முன்றலிலும் மைதான நிகழ்வுகள் யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

டாக்டர்.திருமதி.ஜெ.கணேச மூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பொ. தயானந்தன், கௌரவ விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். த.சத்திய மூர்த்தி, சிறப்பு விருந்தினராக சீமாட்டி புடைவையக உரிமையாளர் ரி.சற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

சாஸ்திரங்கள்

✦ எறும்புகள் ஒன்றுக்கொன்று பேசிக்கொள்ளும். உத்தரவு போடும். அனைவரும் ஒன்றுகூடி மகிழ்ச்சியாக அளவளாவிக் கொள்ளும். மனிதர்களைப் போன்றே எறும்புகளும் இறந்த உடல்களை மண்ணில் புதைத்து விடுகின்றன. பணிகளை பங்கிட்டுச் செய்து கொள்கின்றன. எறும்புகளிடம் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்.

சுத்தம், சுறுசுறுப்பு, உழைப்பு, ராஜவிசுவாசம், விவேகம், தலைமைக்குக் கட்டுப்படுதல்.

-திருக்குர் ஆன்

மேம்பாலத்திலிருந்து குதித்த மாணவி வைத்தியசாலையில்

(கொழும்பு)

பன்னிப்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள மேம் பாலத்தில் இருந்து பாடசாலை மாணவியொருவர் கீழே குதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேம் பாலத்தில் இருந்து கீழே குதித்த பாடசாலை மாணவி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மேம் பாலத்தில் இருந்து குதித்த மாணவி 11 ஆம் தரத்தில் கல்வி கற்பவரெனவும் மாணவி மேம்பாலத்தில் இருந்து கீழே குதித்தமைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில் விடத்தல்தீவு கிராமம், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, கணேசபுரம், வெள்ளாங்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், விடத்தற தீவு வைத்தியசாலை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

முதற்கடற்கலம் வெள்ளோட்டம்

(கொழும்பு)

பாரிய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதற்கடற்கலம் வெள்ளோட்டமிடப்படவுள்ளது.

சீனோர் நிறுவனம் தயாரித்த முதலாவது ஆழ்கடல் மீன்பிடிப் படகு இன்று நீர் கொழும்பு கடலில் வெள்ளோட்டம் விடப்படும். இதில் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

கடற்றொழில் துறையில் பயன்படுத்தப்படும் சிறிய அளவிலான கடற்கலங்களுக்கு பதிலாக நவீன வசதிகள் கொண்ட பெரிய கடற்கலங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான திட்டத்தை கடற்றொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது. சீனோர் என்ற அரச நிறுவனம் இத்தகைய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை தயாரித்து வருகிறது. ஒரு படகின் பெறுமதி ஏழு கோடி ரூபாவாகும். இதற்குரிய செலவில் பாதியை அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது.

மீன்களை பிடிப்பதற்கு வலைகளை பயன்படுத்தாமல், சர்வதேச அங்கீகாரம் பெற்ற பொறிமுறையை உபயோகப்படுத்தும் வகையில் கடற்கலங்கள் தயாரிக்கப்படுகின்றன. பிடிக்கப்பட்ட கடல் உணவுகளின் தரம் குறையாமல் சேமித்து வைக்கக்கூடிய களஞ்சிய வசதிகளும் அவற்றில் உள்ளன. (இ-7)

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

நல்ல எண்ணம் வேண்டும்

✦ குடும்ப வாழ்வில் இருந்து கொண்டு, கடவுள் மீது பக்தி செலுத்துபவனே வீரம் மிக்கவன்.

✦ மனதில் நல்ல எண்ணம் இருந்தால் தான் தூயபக்தி உண்டாகும்.

✦ கடவுள் என்னும் எஜமானனுக்கு பணிவிடை செய்து வாழ்வது தான் பிறவிப் பயன்.

✦ படிப்பதை விட கேட்டு அறிவது உயர்ந்தது. நேரில் கண்டு உணர்ந்து கொள்வது இன்னும் சிறந்தது.

✦ விவேகம் இல்லாதவனுக்கு எத்தனை சாஸ்திர அறிவு இருந்தாலும், அதனால் பயனேதும் இல்லை.

சிகிச்சை பலனின்றி முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 9மணிக்கு உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி புத்தூர் சந்தியில் கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை பட்டாரக வாகனமும் சைக்கிளும் மோதி விபத்துள்ளானது.

இதில் சைக்கிளில் பயணித்த முதியவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காது முதியவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை கந்தையா (வயது-70) என்பவரேயாவார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி இளங்கீரன் விசாரணைகளை மேற்கொண்டார். (இ-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் விஷ்ணுசுந்தரம் ஞாபகார்த்த ஒருநாள் உதைபந்தாட்டத் தொடர்

இளங்கதிர் சம்பியன்

வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகம் அமரர் விஷ்ணுசுந்தரம் ஞாபகார்த்தமாக வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே மாபெரும் 9 நபர் கொண்ட ஒருநாள் உதைபந்தாட்ட தொடரினை கடந்த ஞாயிற்றுக்கிழமை றெயின்போ மைதானத்தில் நடத்தியது.

அந்த வகையில் இச்சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்திலே வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்திலே ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாத காரணத்தினால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது.எனவே வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட தண்ட உதையில் பிரசாந்தின் அசத்தல் கோல்காப்பின் துணையுடன் 4-3 என்ற கோல்கணக்கில் இளங்கதிர் அணியானது வெற்றியீட்டி சம்பியனாகியது.

இச்சுற்றுத்தொடரின் தொடராட்ட நாயகனாக இளங்கதிர் அணியைச் சேர்ந்த பிரசாந் .சிறந்த கோல்காப்பாளராக அதே அணியைச்சேர்ந்த விஜிகரன், நன்னடத்தை அணியாக றெயின்போ அணியும் மற்றும் மக்கள் மனம் கவர்ந்த வீரராக றெயின்போ அணியைச்சேர்ந்த சங்கரும் தெரிவு செய்யப்பட்டனர்.மேலும் வெற்றி பெற்ற இளங்கதிர் அணிக்கு சுழல் கிண்ணம் , வெற்றிக்கிண்ணத்துடன் 15000 ரூபா பணப்பரிசிலும் இரண்டாம் இடம்பிடித்த சைனிங்ஸ் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் 10000 ரூபா பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. (க)

அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த உதைபந்து போட்டி

கலட்டி ஐக்கியம் வெற்றி

அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை வி.கழகம் நடத்தும் சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற போட்டியில் இரண்டாவது ஆட்டத்தில் றேஞ்சஸ் வி.கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய வி.கழகம் மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய வி.கழகம் 5.2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக கலட்டி ஐக்கிய வி.கழகத்தைச் சேர்ந்த செ.நிஷாந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்குரிய பதக்கத்தை கற்கோவளம் உதயதாரகை வி.கழக முன்னாள் வீரன் அ.அஜந்தன் வழங்கி கௌரவித்தார். (க)

அல்வாய் நண்பர்கள் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடர்

காலிறுதியில் யங்கம்பன்ஸ்,விண்மீன்

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி லீக் மற்றும் பருத்தித்துறை லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9நபர்கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை அன்று நடைபெற்ற முதலாவது போட்டி யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகம் மோதியது. விறுவிறுப்பாக ஆரம்பித்து இடைவேளையின் பின்னர் போட்டி மிகவும் பரபரப்பினை ஏற்படுத்த 40 நிமிடத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த நிரோசன் முதல் கோலினை பதிவு செய்தார். மீண்டும் 42 நிமிடத்தில் கலட்டி ஐக்கியம் வீரர் நிசாந்தன் முதல் கோலினை பதிவு செய்து போட்டியை சமன் செய்தார். வெற்றியை தீர்மானிக்க பனால்டி இடம்பெற 3:1என்ற முறையில் பனால்டி முடிவடைய யங்கம்பன்ஸ் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் விண்மீனை எதிர்த்து உதயதாரகை வி.கழகம் மோதியது.விண்மீன் வீரர் யூட் கெனடி முதல் கோலினை 5 நிமிடத்தில் போட்டார். 10.18 நிமிடத்தில் விண்மீன் வீரர் டேமியன்.நிஷ்ரன் கோல்களை பதிவு செய்தனர். இடைவேளையின் பிற்பகுதி யில் விண்மீன் வீரர் அமலதாஸ் 35.40 நிமிடத்தில் இரு கோல்களை போட்டார். 5:0 என்றமுறையில் விண்மீன் வெற்றி பெற்றுகாலிறுதியாட்டத்திற்கு தெரிவானது. (க)

யாழ்.கரப்பந்தாட்ட சங்கம் நடத்திய A பிரிவுக்கான போட்டி

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்திய A பிரிவு போட்டிகளில் யாழ்.பல்கலைக்கழகம் தான் விளையாடிய மூன்று போட்டிகளிலும் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞனை 2:0 எனவும் அச்சுவேலி யூத்தை 2:0 எனவும் புத்தூர் கலைமதியை 2:0 எனவும் வென்றது. ஆவரங்கால் இந்து இளைஞன் கலைமதி மற்றும் யூத் அணியை 2:0 என வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது

மற்றைய பிரிவில் ஆவரங்கால் மத்தி புத்தூர் வளர் மதியை 2:1 எனவும் அச்சுவேலி ஸ்ரார் அணியை 2:0 என வென்றும் புத்தூர் வளர் மதி ஸ்ரார் அணியை 2:0 எனவும் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

முதலாவது அரையிறுதியில் யாழ்.பல்கலைக்கழகம் புத்தூர் வளர்மதியுடன் மோதவுள்ளது. 2வது அரையிறுதியில் ஆவரங்கால் இந்துவும் ஆவரங்கால் மத்தியும் மோதும். (க)

இன்றைய போட்டிகள்

வடமராட்சி லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்டஉதைபந்தாட்டபோட்டியில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தைஎதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

****

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் கந்தசாமி ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தமாக நடைபெறும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்மீன் (B) விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.பீற்றர்ஸ் (A) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவை செஞ்சுடர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

வரணி யுத் அணியை வீழ்த்தியது நக்கீரன் விளையாட்டுக்கழகம்

அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை வி.கழகம் நடத்தும் சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற போட்டியின் முதலாவது ஆட்டத்தில் வரணி யுத் வி.கழகத்தை எதிர்த்து நக்கீரன் வி.கழகம் மோதியது. இப் போட்டியில் நக்கீரன் வி.கழகம் 8.1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக நக்கீரன் வி.கழகத்தைச்சேர்ந்த ஜிவகாந் தெரிவு செய்யப்பட்டார் .இவருக்கு உரிய பதக்கத்தை கற்கோவளம் சனசமூக நிலைய தலைவரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (க)

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தின் யாழ்.மாவட்ட ரீதியிலான மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற போட்டியில் இரண்டாவது இடத்தினை கொம்மந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

அவ் அணியினரைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு உரிமையாளர்...

செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்.மாட்டின் வீதி பகுதியில் அமைந்துள்ள 18ஆம் இலக்க வீட்டில், அவ்வீட்டின் உரிமையாளரான வேதராஜா லில்லிமேரி (வயது 85) மற்றும் அவ்வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவர்களான ஜெரோம், ஜெரோமின்மனைவி ஆகியோர் கடந்த 2008, 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வசித்து வந்துள்ளனர்.

க்டந்த 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் குறித்த வயோதிபபெண்ணான லில்லிமேரி காணாமல் போயிருப்பதாக உறவினர்களுக்கு ஜெரோமால் அறிவிக்கப்பட்டது. அது தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

2 மாதங்கள் கடந்த நிலையில், காணாமற் போனதாக கருதப்படும் லில்லிமேரியை தனது கணவனே கொலை செய்து அவ்வீட்டிலேயே புதைத்து வைத்துள்ளதாக ஜெரோமின் மனைவியால் லில்லிமேரியின் உறவினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டதையடுத்து ஜெரோம் கைதுசெய்யப்பட்டதுடன், கடந்த 2009ஆம் ஆண்டு 03ஆம் மாதம் 11ஆம் திகதி சடலம் நீதவான் முன்னிலையில் தோண்டியெடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சந்தேகநபருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று விசாரணைகள் முடிவுற்ற பின்னர் சட்டமாஅதிபர் திணைக்களத்துக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது. சட்டமா அதிபரால் குறித்த நபருக்கு எதிராக கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு குறித்த வழக்கு யாழ். மேல் 'நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டது. வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டவாதியான நாகரட்ணம் நிஷாந் மன்றில் ஆஜராகி வழக்கை நெறிப்படுத்தியிருந்தார்.

அந்தவகையில் வழக்கின் முக்கிய சாட்சியான ஜெரோமின் மனைவி இறந்தமையால் அவரின்றி வழக்கு விசாரணைகள் இடம் பெற்றது.

இறந்தவரின் உறவினரது சாட்சியம், நகைக்கடை உரிமையாளரின் சாட்சியம், அப்போதைய நீதவானின் கூற்று, பொலிஸ் உத்தியோகத்தரின் சாட்சி, மரண வைத்திய அதிகாரியின் சாட்சி என்பன நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டது.

இதில் ஜெரோம் என்பவர் லில்லிமேரியின் கழுத்தை நெரித்தும், தலையில் மொட்டையான ஆயுதம் ஒன்றினால் தாக்கியும் கொலை செய்யப்பட்டமை சட்டவைத்தியரின் சாட்சியம் மற்றும் ஏனைய சாட்சியங்கள் மூலமும் உறுதிசெய்யப்பட்டது. கொலையை நேரில் கண்டதான ஜெரோமின் மனைவியாரின் சாட்சியமும் பொலிஸார், அப்போதைய நீதவானின் கூற்று மூலம் உறுதி செய்யப்பட்டது

எனினும் ஜெரோம் தனது சாட்சியத்தில் கொலை நடைபெற்றதான காலப்பகுதியில் தாம் இராணுவ புலனாய்வாளர்களால் கரவெட்டியில் வைத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் 2009ஆம் ஆண்டு தை மாதகாலப்பகுதியிலேயே விடுவிக்கப்பட்டதாகவும் தனது மனைவிக்கு வேறொருவருடன் தொடர்பு இருந்ததாகவும் அவர்களே குறித்த கொலையை செய்திருக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால் வழக்கு தொடுநரால் குறித்த சாட்சியம் பொய் என நிரூபிக்கப்பட்டதையடுத்து குறித்த கொலை வழக்கில் எதிரியான குணபாலசிங்கம் ஜெரோம் குற்றவாளியென நீதிபதி அறிவித்து அவருக்கு தூக்கு தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். (9)

வித்தியா படுகொலை...

வித்தியாவின் படுகொலை வழக்கின் நீதாய விளக்க (ரயல் அட்பார்) விசாரணைகள், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் கடந்த 12 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில் ஆரம்பமாகியது.

அந்த வகையில் இன்றைய தினம் வழக்கு தொடுநர் தரப்பில் இருந்து வழக்கை நெறிப்படுத்துவதற்காக பதில் சட்டமா அதிபர் டப்புள டி லிவேரா தலைமையில்

பிரதி மன்றாதிபதி பி.குமாரரட்ண மற்றும அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் ஆகியோர் மன்றில் முன்னிலையாகவுள்ளனர்.

குறித்த வழக்கின் எதிரிகளான 9 பேருக்கும் எதிராக 41 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் 37 சாட்சிகள் இன்றைய தினம் அழைக்கப்பட்டுள்ளதுடன், தொடர் விளக்கத்தின் போது அவர்களின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்படவுள்ளது.

இன்றில் இருந்து நாளை 29ஆம் திகதி நாளை மறுதினம் 30ஆம் திகதி மற்றும் எதிர்வரும் யூலை மாதம் 3,4,5ஆம் திகதிகளில் தொடர் விளக்கம் (சாட்சிய பதிவுகள்) இடம் பெறவுள்ளதாக நீதிபதிகளால் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

தரம் ஒன்று...

2018ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தை எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி வரை நீடிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னர் இறுதி விண்ணப்ப தினமாக ஜூன் மாதம் 30ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்படி எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் விண்ணப்பங்களை நேரடியாக அதிபர்களிடம் கையளிக்க முடியும்.

கையளித்தமை தொடர்பில் பாடசாலை நிர்வாகம் வழங்குகின்ற ஆவணத்தையும் பெற்றோர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலமாக இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைக்க முடியும் எனவும் கல்வி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (11)

பல்கலை மாணவர்...

ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, குறித்த சூட்டுச் சம்பவம் தொடர்பாக, சம்பவம் நடைபெற்ற அன்றே தனது தகவல் குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்ததாகவும், மேலதிகாரிக்கும் அது தொடர்பாக தெரியப்படுத்தியதாகவும் இந்த வழக்கின் முதலாவது சந்தேக நபர் மன்றிற்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் நீதிமன்றத்திற்கு பொலிஸார் வழங்கிய முதல் தகவலில் அது ஏன் மறைக்கப்பட்டு, அது விபத்து என உண்மைக்கு புறம்பான தகவல் பொலிஸ் அதிகாரிகளால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது என்பது தொடர்பான விசாரணையை, உதவி பொலிஸ் அத்தியட்சகர், தலைமை பொலிஸ் பரிசோதகர், குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியிடம் மேற்கொள்ளப்பட வேண்டும் என சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி மு.ரெமிடீயாஸ் மன்றில் தெரிவித்திருந்தார்.

குறித்த விடயத்தை கவனத்தில் எடுத்த நீதிபதி அது தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதற்கு, எதிர்வரும் ஜூலை மாதம் 11ஆம் திகதி வழக்கு திகதியிடப்பட்டுள்ளது

அத்துடன் விசாரணையின் போது சாட்சியாளர்களை பொலிஸ் தரப்பினர் விசாரணை என்னும் பெயரில் அச்சுறுத்தியது தொடர்பான அறிக்கை மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நீதிபதி குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கட்டளை பிறப்பித்திருந்தார். (9)

முதலமைச்சருக்கு...

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி கொண்டு வந்த நிலையில், அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் பூரண கடையடைப்பு போராட்டங்களையும் முன்னெடுத்தனர்.

இந் நிலைமை தமிழரசுக் கட்சிக்குப் பாதகமாக அமைந்ததையடுத்து, நிலைமையை சுமுகமாக்குவதில் அந்தக் கட்சி தீவிரமாகச் செயற்பட்டது.

இதனையடுத்து கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்கள் மேற கொண்ட சமர முயற்சியின் பலனாக நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

எனினும் அடுத்துவரும் ஒன்றரை வருடங்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு உளரீதியில் நெருக்கடியைக் கொடுப்பதற்கென தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் கூடிய சிலர் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன்.

இதன்பிரகாரம் அமைச்சர்கள் நியமனத்தில் முதலமைச்சருக்கு நெருக்கடி கொடுத்தல; ஏனைய இரண்டு அமைச்சர்கள் மீதான விசாரணையின் போது அந்த இரண்டு அமைச்சர்களையும் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காமல் செய்தல்; சபைக் கூட்டங்களின் போது வெளிநடப்பு செய்தல் என்றவாறு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு உளரீதியாக நெருக்கடி கொடுக்கப்படவுள்ளதாக அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இரண்டு அமைச்சர்கள் மீதான விசாரணையை முதலமைச்சர் மேற்கொள்வதற்கு தனது சம்மதத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எழுத்துமூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் ஒப்படைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

கல்வியமைச்சரை...

செயல்முறைகளுக்கும், செயல் நடவடிக்கைகளுக்கும் அமைவாக உரிய நேரத்தில் குறிப்பிட்ட நியமனங்கள் என்னால் செய்யப்படும். தற்பொழுது பதவி விலகிய அமைச்சர்களின் அமைச்சுக்களை நானே மேற்பார்வை செய்து வருகின்றேன் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.மாட்டின் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே கல்வியமைச்சராக விருந்த குருகுலராசாவின் இடத்துக்குச் ஆர்னோல்ட்டை நியமிப்பது என முடிவெடுதது. அம்முடிவு முதலமைச்சருக்கு கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம் மூலம் அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்தே முதலமைச்சர் மேற்படி அறி விப்பை விடுத்துள்ளார். (11)

கேப்பாப்பிலவு...

படையினர் வசமுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு கோரி, கடந்த 4 மாதங்களுக்கு மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், அரசாங்கத்திடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் கேப்பாப்பிலவு மற்றும் கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு சென்ற நூற்றுக்கணக்கான மக்கள், கொழும்பு கோட்டையிலிருந்து நேற்று பேரணியாக சென்று ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டனர். இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்திய கேப்பாப்பிலவு மக்கள், ஜனாதிபதி செயலகத்தில் மகஜரொன்றை கையளித்தனர். ஜனாதிபதியை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்காத நிலையில், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சமந்திரணசிங்கவிடமே குறித்த மகஜர் கையளிக்கப்பட்டது.

இதன்போது, கேப்பாப்பிலவு பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கவில்லையென குறிப்பிட்டுள்ள ஜனாதிபதியின் உதவிச் செயலாளர், காணி உறுதிகளின் பிரதிகள் அடங்கிய கோவையை மின்னஞ்சலில் அனுப்பி வைககுமாறு கேட்டுக்கொண்டதாக அவரை சந்தித்த பிரதிநிதிகள் தெரிவித்தனர். அத்தோடு, ஜனாதிபதி தலைமையில் மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.(11)

(மற்றுமொரு 3ஆம் பக்கத்தில்)

பாதுகாப்பு...

காப்பு படையணிகளின் பிரதானி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆயுதம் தாங்கிய படையணிகளின் சேனாதிபதியான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று 27ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த ஜெனரல் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (11)

ஐ.நாவில் பதவி...

டேரஸ் அவர்கள் தனது இளைஞர் அலுவல்கள் தூதுவராக நியமித்துள்ள இலங்கையைச் சேர்ந்த திருமதி ஜயத்மா விக்கிரமநாயக்க நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவை சந்தித்த போது ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்தார்.

இலங்கையின் நற்பெயரை உலகம் முழுவதும் அறியச்செய்து திருமதி ஜயத்மா விக்கிரமநாயக்க தாய்நாட்டிற்கு பெற்றுக்கொடுத்த கௌரவத்தினை பாராட்டிய ஜனாதிபதி, அவருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், இலங்கையின் இளைய தலைமுறையினருக்காகவும் உலகவாழ் இளைய தலைமுறையினருக்காகவும் அவர் பாரிய சேவை ஆற்றக்கூடிய வாய்ப்பு கிடைக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

தனது 21ஆவது வயதில் பூகோள இளைஞர் அபிவிருத்தி செயற்திட்டத்தில் அங்கம் வகித்த ஜயத்மா விக்கிரமநாயக்க உலக இளைஞர் திறன்கள் தினத்தை பிரகடனப்படுத்தல் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உயர் மட்ட செயற்திட்டங்கள் பலவற்றில் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இளைஞர் அபிவிருத்திக்காக தேசிய மட்டத்தில் அவரால் ஆற்றப்பட்ட முதன்மையான பணிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரால் அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அளுத்கம சங்கமித்தா மகளிர் கல்லூரியினதும், கொழும்பு விசாகா கல்லூரியினதும் பழைய மாணவியான 27 வயதுடைய ஜயத்மா கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணி பட்டதாரியாவார். மேலும் அப்பல்கலைக்கழகத்திலேயே அபிவிருத்தி கற்கைகள் தொடர்பான பட்டப்பின் படிப்பையும் தொடர்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

95 அரசியல்...

கொண்டுள்ளதாகவும் இதன்படி எதிர்வரும் காலங்களில் கட்சிப் பதிவு குறித்து ஆராய்ந்து பதிவு வழங்கப்படும் எனவும் தெரிவித்து ள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 64 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (11)

சம்பந்தன்-விக்...

வந்துள்ளது.

வட மாகாண கல்வி அமைச்சராக இருந்த குருகுலராசா மற்றும் விவசாய அமைச்சராக இருந்த ஐங்கரநேசன் ஆகியோர் பதவி விலகினர்.

இதனையடுத்து, இரு அமைச்சுக்களும் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் பொறுப்பேற்கப்பட்டது.

மேலும், குறித்த பதவிக்கு வேறு இருவரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில், இந்தப் பதவிகளுக்கு யாரைத் தெரிவு செய்வது என்பது தொடர்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள், வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. (11)

பௌத்தம் ஜனாதி...

அவர் மேலும் கூறுகையில்,

அநேகமானவர்கள் இன்று பௌத்த மதத்தை அழிக்கப் போவதாகவும் நாட்டை பிரிக்கப் போவதாகவும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இவ்வாறு குற்றம் சுமத்துவது ஓர் பாவ காரியமாகும்.

நாட்டின் பிரதானி என்ற ரீதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பௌத்த மதத்திற்கு அழிவு ஏற்படக்கூடிய எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அளிக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-8857)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(திருத்தலைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வீடு விற்பனைக்கு

யாழ்.வீதி, மானிப்பாயில் வீட்டுடன் கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0772799670

(C-8881)

மயிலிட்...

இருந்த பொது மக்களின் காணிகள் தற்போது பகுதி பகுதியாக இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், வலிவடக்கு மக்களின் பாரிய மூலதனங்களில் ஒன்றாகவும் முக்கிய மீன்பிடி துறைமுகமாகவும் இருந்த மயிலிட்டி துறைமுகம் இராணு வத்தினர் வசமே இருந்துவந்தது. அதை விடுவிக்குமாறு பொதுமக்களால் பாரிய ஆர்ப்பாட்டங்கள் பல தடவை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் எதிர்வரும் 3 ஆம் திகதி 9 மணிக்கு தையிட்டி வடக்கு ஜெ/249 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட 54 ஏக்கர் நிலப்பரப்பு பொது மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு படைத்தரப்பினர் அறிவித்துள்ளனர். (9)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

பிரெஞ்சு கற்பதற்கு வட மாகாணத்தில் FRENCH EMBASSYயின் கீழ் இயங்குகிறது.
யாரும் படிக்கலாம். www.ambafrance.lk.org

DELF A1, A2 வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும்.

021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(9594)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரிதகதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress

(C-8888)

தரம் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு

இப்பொழுது விற்பனையாகிறது

தேசிய ரீதியில் கற்பித்தலில் முன்னணி வகிக்கும் 15 ஆரம்பக் கல்வி ஆசிரியவளவாளர்களால் எதிர்ப்பார்க்கை வினாக்களுடன் தொகுக்கப்பட்டது

பூமாலை
விசேட கையேட்டுடன்

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
0776258778

(C-8897)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

JSAC

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

நம்பிக்கை இல்லம்
பணியாள் வெற்றிடம் கோரல்

யாழ் சமூக செயற்பாட்டு மையத்தினால் செயற்படுத்தப்படவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நம்பிக்கை இல்லத்தின் (Safe House) திட்டத்திற்கு கீழ்வரும் உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட உள்ளனர். மிகப் பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பவ முகாமையாளர் (Case Manger) - வெற்றிடம் - 1

- க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும் மேலதிக கல்வித்தகைமைகள் முன்னுரிமையாகக் கருதப்படும்.
- க.பொ.த (சாதாரண தரம்) தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- பால்நிலை மற்றும் பெண்கள் சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய நல்லறிவும் பயிற்சிகளும் பெற்றிருத்தல் வேண்டும்.
- பெண்கள், சிறுவர்கள் தொடர்பான செயற்பாடுகளில் குறைந்தது 2 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கணணி பற்றிய அறிவும், சிறந்த தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவ திறன்கள் காணப்படுதல் வேண்டும்.
- நாட்டின் சகல பாகங்களிற்கும் தனியாக சென்று வரும் ஆற்றலும், மோட்டார் சைக்கிள் செலுத்துனர் அனுமதிப்பத்திரமும் பெற்றிருத்தல் வேண்டும்.
- வயது எல்லை 22 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- இரகசியம் காப்பவராகவும், அணிச் செயற்பாட்டாளராகவும் (Team worker) இருத்தல் வேண்டும்.

இல்லப்பராமரிப்பாளர் / சமையலாளர் - 03 வெற்றிடங்கள்

- க.பொ.த (சாதாரண தரம்) வரை கற்றிருத்தல் வேண்டும். மேலதிக கல்வித் தகைமைகள் முன்னுரிமையாகக் கருதப்படும்.
- குறைந்தது 4 நாட்கள் இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றும் வல்லமை இருத்தல் வேண்டும்.
- பெண்கள்/சிறுவர்கள் சம்மந்தமான பிரச்சினைகள் பற்றிய அறிவாற்றல் வேண்டும்.
- சிறந்த மொழியாற்றல் மற்றும் துல்லிய எழுத்தறிவு திறன் கொண்டிருத்தல் வேண்டும்.
- சமையல் கலை தெரிந்திருப்பதுடன் இல்லப் பராமரிப்பு பற்றிய முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- இரகசியம் காப்பவராகவும், நற்பண்புள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பங்கள் எம்மால் (JSAC) கோரப்படுகின்றன. பெண் விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பிக்க முடியும், தகுதியானவர்கள் தமது விண்ணப்பங்களை ஜூலை 5ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். சம்பள விபரம் பேசித் தீர்மானிக்கப்படும். பொருத்தமானவர்களாகக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

இணைப்பாளர்
யாழ் சமூக செயற்பாட்டு மையம் (JSAC)
பிராந்திய அலுவலகம்
136A, கண்டி வீதி, பரந்தன், கிளிநொச்சி.

(C-8899)

2 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்

சின்னையா கனகராசா

(வாணி விலாஸ் உரிமையாளர்)

திதி: 28.06.2017

பிறப்பு :1944.06.25 இறப்பு : 2015.06.21

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் சென்றவரே
நின் நினைவு வந்து
நித்தம் எம்மை வாட்டுதய்யா...

காலங்கள் எவ்வளவு வேகமாக நகர்கின்றது
கண்ணயர்ந்த வேளையில்
இரண்டு வருடம் கடந்ததும்
முள்ளாக எங்கள் மனதில் உன் நினைவு குத்துதய்யா

அன்புடனும் பண்புடனும் எம்மை அரவணைத்து
எம்மை ஆளாக்கிய எங்கள் அன்புத் தெய்வமே
அந்த இனிய நாட்கள் வந்து என் நினைவை கூட்டுதய்யா

இருவருடம் என்ன இன்னும் ஓராயிரம்
ஆண்டுகள் கடந்தாலும் அழியாது உன் நினைவு
உன் ஆத்மா இறைவனிடம் ஈடேற
நாம் வணங்குகிறோம் எந்நாளும்...

இல. 76/1, விசுவமடு மேற்கு, விசுவமடு.

தகவல் : குடும்பத்தினர்

(C-8901)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட் யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org